# சிலாங்கூர் இன்று

இலவசம்

www.selangorkini.my Media_Selangor SelangorTV selangortv.my MediaSelangor

SMART SELANGOR

SELANGOR

திருவள்ளுவர் ஆண்டு 2055 / குரோதி வருடம் புரட்டாசி / ஐப்பசி மாதம் / அக்டோபர் 08/2024 / OCTOBER 08/2024


## தமிழ்ப்பள்ளிகளுக்கு பேருந்து கட்டணம் RM1,027,800

**ஷா ஆலம்-**

சிலாங்கூர் மாநில அரசின் பள்ளி பேருந்து கட்டண உதவித் திட்டத்தின் கீழ் மாநிலத்தில் உள்ள 99 தமிழ்ப் பள்ளிகளைச் சேர்ந்த 3,426 வசதி குறைந்த மாணவர்களுக்கு 10 லட்சத்து 27 ஆயிரத்து 800 வெள்ளி வழங்கப்பட்டது.

இவ்வாண்டு ஏப்ரல் மாதம் உலு சிலாங்கூரில் நடைபெற்ற முதல் கட்ட நிதியளிப்பு நிகழ்வின் போது பத்து பள்ளிகளைச் சேர்ந்த 334 மாணவர்களுக்கு 1 லட்சத்து 200 வெள்ளி உதவித் தொகையாக வழங்கப்பட்ட வேளையில் இன்றைய இரண்டாம் கட்ட நிதியளிப்பு நிகழ்வில் 89 பள்ளிகளில் பயிலும் 3,092 மாணவர்களுக்கு 927,600 வெள்ளி மாணவர்களுக்கு நிதி பகிர்ந்தளிக்க பட்டதாக மனித வளம் மற்றும் வறுமை ஒழிப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.பாப்பா ராய்டு கூறினார்.

முறையான போக்குவரத்து வசதி இல்லாத மற்றும் பள்ளியில் இருந்து அதிக தொலைவில் வசிக்கும் தோட்டப்புற மக்கள் மட்டுமின்றி ஏழ்மை நிலையில் உள்ள நகர்ப்புற பெற்றோர்களையும் இலக்காக கொண்டு இந்த திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது என்று அவர் சொன்னார்.

ஆண்டுக்கு 300 வெள்ளியை வழங்கும் இந்த பள்ளி பேருந்து கட்டண உதவித் திட்டத்தை கடந்த 2011 ஆம் ஆண்டு முதல் மாநில அரசு அமல்படுத்தி வருகிறது. மாதம் 2,000 வெள்ளிக்கும் குறைவான வருமானம் பெறும் பி40 தரப்பினருக்கு உதவுவதை இந்திட்டம் முதன்மை நோக்கமாகக் கொண்டுள்ளது என்றார் அவர்.

இத்தகைய உதவித் திட்டங்களை அமல்படுத்துவதில் முழு ஒத்துழைப்பு வழங்கி வரும் மாநில மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரிக்கு நன்றி தெரிவித்துக் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

இந்த மானியத் தொகை கிடைத்த மூன்று நாட்களுக்குள் அதனை சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கும் படி அனைத்து பள்ளி நிர்வாகம், பெற்றோர் ஆசிரியர் சங்கம் மற்றும் மேலாளர் வாரியத்தை தாம் கேட்டுக் கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

## ஈராண்டுகளில் 6,358 ரூமா இடமான் வீடுகள் பூர்த்தியாகும்




**ஷா ஆலம்-**

மொத்தம் 6,358 ரூமா இடமான் வீடுகள் முடிக்கப்பட்டு அடுத்த ஆண்டு முதல் கட்டங் கட்டமாக அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

வரும் 2025 ஆம் ஆண்டில் 2,912 வீடுகளுக்கான சாவிகள் ஒப்படைக்கப்படவுள்ள வேளையில் அதற்கு அடுத்த ஆண்டு மேலும் 3,442 வீடுகள் ஒப்படைக்கப்படும் என்று அவர் கூறியதாக சினார் ஹரியான் ஏடு தெரிவித்துள்ளது.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் நாங்கள் ஏறக்குறைய 6,358 வீடுகளை ஒப்படைப்போம். இது இடமான் வீடமைப்புத் திட்டத்தை மட்டுமே உள்ளடக்கியிருக்கும் என்றார் அவர்.

பண்டார் சௌஜனா புத்ராவில் பிளஸ்பி இடமான் வீடுகளை ஒப்படைக்கும் விழாவில் சந்தித்தபோது அவர் இவ்வாறு கூறினார்.

37 கோடியே 50 லட்சம் வெள்ளி மொத்த வளர்ச்சி மதிப்பைக் கொண்ட (ஜி.டி.வி.) இரண்டு அடுக்கு மாடி குடியிருப்பு வீடுகள் உள்ளடக்கிய 1,312 வீடுகள் அதன் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டன.

இதனிடையே, மலிவு விலையில் வீடுகளை வழங்குவதில் மாநில அரசுடன் இணைந்து பணியாற்றுவதில் தாங்கள் பெருமிதம் கொள்வதாக கும்புலன் எம்.ஜி.பி. பெர்ஹாட் நிர்வாகத் தலைவர் டான் ஸ்ரீ ஐஆர் டாக்டர் லிம் ஹாக் சான் கூறினார்.

# சமூகத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்த புதிய திட்டம்



**பெட்டாலிங் ஜெயா-**

இந்திய சமூகத்தின் பொருளாதாரத்தை வலுப்படுத்த ஒரு புதிய முயற்சியை, தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் கூட்டுறவு அமைச்சகம் மூலம் மடாணி அரசு விரைவில் அறிவிக்கும் என்று அதன் துணை அமைச்சர் டத்தோஸ்ரீ ஆர். ரமணன் தெரிவித்தார்.

சிலாங்கூர் மற்றும் கூட்டரசு பிரதேச மலையாளி சங்கம், யயாசன் பேங்க் ராக்யாட்டுடன் இணைந்து தோட்ட மாளிகையில் ஏற்பாடு செய்திருந்த "ஓணம் வண்ணால்லோ 3.0" நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்த பிறகு, பேசிய அவர் "அடுத்த வாரம் நான் மற்றொரு திட்டத்தை அறிவிப்பதற்கு முன் முக்கிய பிரச்சினைகளை மறுபரிசீலனை செய்வேன்" என்று செய்தியாளர்களிடம் கூறினார்.

மேலும் யயாசன் வங்கி ரக்யாட் பொது மேலாளர் சைஃபுல் ரிசல் அப்துல் கானி மற்றும் நிகழ்ச்சி ஏற்பாட்டுக் குழுவின் தலைவர் ஷைலா நாயர் மற்றும் 800க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர்.

சுங்கை பூலோ எம்.பி.யுமான ரமணன், கடந்த நான்கு மாதங்களில் இந்திய சமூகத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் மூன்று சிறப்பு முயற்சிகளை வெற்றிகரமாக செயல்படுத்திய பிறகு, ஒரு புதிய முயற்சி உருவாகி வருகிறது என்றார்.

"கடந்த நான்கு மாதங்களில் இந்திய தொழில்முனைவோரின் பொருளாதாரத்தை உயர்த்த மூன்று சிறப்பு முயற்சிகள் வெற்றிகரமாக தொடங்கப் பட்டதைத் தொடர்ந்து, இந்திய தொழில் முனைவோரின் பொருளாதார வாய்ப்புகளை உயர்த்துவதற்கு பெரிதும் உதவக் கூடிய மற்றொரு கட்டாய முயற்சியை நான் அடையாளம் கண்டுள்ளேன்.

முன்னர் அறிவிக்கப்பட்ட மூன்று முன்முயற்சிகளில் 30 மில்லியன் ரிங்கிட் ஒதுக்கீடும், தெக்குன் நேஷனல் மூலம் அதிகாரமளித்தல் நிதியளிப்பு திட்டம் பெரிய அளவில் செல்கிறது; அமானா இக்தியார் மலேசியாவின் கீழ் செழிப்பு, அதிகாரமளித்தல் மற்றும் ஒரு புதிய இயல்பானது, இந்தியப் பெண்களுக்கு அதிகாரம் அளிக்கும் நோக்கில் RM50 மில்லியன் ஒதுக்கீடு; மற்றும் பேங்க் ராக்யாட் இந்திய தொழில்முனைவோர் நிதியுதவி-i வங்கி ரக்யாட்டின் கீழ், RM50 மில்லியன் ஒதுக்கீடு ஆகியவைகள் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் தலைமையிலான மடாணி அரசாங்கம், மலேசியா மடாணியின் கொள்கைக்கு ஏற்ப, இன ஒற்றுமையை அதன் அடிப்படைக் கொண்டு செயல்ப் படுத்துகிறது என்று ரமணன் வலியுறுத்தினார்.



# சமூகத் தலைவர்களுக்கான மானியத்தை அதிகரிக்க பரிந்துரை

**ஷா ஆலம்-**

இந்திய சமூகத் தலைவர்களுக்கான வருடாந்திர மானியத்தை அடுத்தாண்டு தொடங்கி 10,000 வெள்ளியிலிருந்து 20,000 வெள்ளியாக உயர்த்துவதற்கான பரிந்துரையை தாம் மாநில அரசிடம் முன்வைத்துள்ளதாக மனித வளம் மற்றும் வறுமை ஒழிப்புத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் வீ.பாப்பா ராய்டு கூறினார்.

தமது இந்த பரிந்துரையை மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கொள்கையளவில் ஒப்புக்கொண்டுள்ள வேளையில் மானிய உயர்வு தொடர்பான திட்ட அறிக்கை முறையாக ஆட்சிக் குழுவில் சமர்ப்பிக்கப்பட்டு உரிய அங்கீகாரத்துடன் அது நடைமுறைப்படுத்தப்படும் என்று அவர் சொன்னார்.

சட்டமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகள் என்ற முறையில் தங்கள் தொகுதிகளில் இந்திய சமூகத் தலைவர்கள் தங்கள் பணிகளை ஆக்ககரமாக மேற் கொள்வதற்குரிய வாய்ப்பினை ஏற்படுத்தும் நோக்கில் இந்த மானிய உயர்வு பரிந்துரை முன்வைக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

அதே சமயம், தங்களின் எதிர்பார்ப்புக்கு ஏற்ப இந்திய சமூகத் தலைவர்களும் தங்கள் ஆற்றலை வளர்த்துக் கொள்ள வேண்டும் என அவர் கேட்டுக் கொண்டார். அவர்கள் மலாய் மொழியில் திறன் பெற்றவர்களாகவும் தங்கள் தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களுடன் அணுக்கமான உறவை கொண்டிருப்பவர்களாகவும் இருத்தல் அவசியம் என்று அவர் குறிப்பிட்டார்.

இது தவிர, ஒவ்வொரு இந்திய சமூகத் தலைவரும் மாதத்திற்கு குறைந்த அளவு திட்டங்களையாவது மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் தங்களின் செயல்திறனை அவர்கள் நிரூபிப்பதற்கு அரிய வாய்ப்பு கிட்டும் என்று அவர் சொன்னார்.

இந்திய சமூகத் தலைவர்களாக பதவி வகிப்பவர்கள் பிற்காலத்தில் ஊராட்சி மன்ற உறுப்பினர்களாவும் சட்டமன்ற உறுப்பினர்-களாகவும் உயர்வு காண்பதற்குரிய வாய்ப்பு உள்ளது. ஆகவே, முன்னேற்றத்திற்கான படிக்கட்டாக விளங்கும் இந்த பதவியை பயன்படுத்தி அவர்கள் ஆக்ககரமான முறையில் செயலாற்றுவது அவசியம் என்றார் அவர்.

## ஸ்கிம் மெஸ்ர ஊசிய எமாஸ் மற்றும் இன்சான் இஸ்திமேவா திட்டங்களுக்கு

# விண்ணப்பிக்கலாம்

**ஷா ஆலம்-**

ஸ்கிம் மெஸ்ர ஊசிய எமாஸ் மற்றும் ஸ்கிம் மெஸ்ர இன்சான் இஸ்திமேவா ஆகியவற்றுக்கான விண்ணப்பங்களை அருகிலுள்ள தொகுதிகளின் சமூக சேவை மையத்தின் வழி இன்னும் விண்ணப்பிக்கலாம்.

இதுவரை மொத்தம் 5,332 ஸ்கிம் மெஸ்ர ஊசிய எமாஸ் பங்கேற்பாளர்கள் மற்றும் 387 ஸ்கிம் மெஸ்ர இன்சான் இஸ்திமேவா பங்கேற்பாளர்கள் பலன்களைப் பெற்றுள்ளனர் என்று பத்து தீகா சட்டமன்ற உறுப்பினர் டேனியல் அல்-ராஷிட் ஹாரோன் தெரிவித்தார்.

"விண்ணப்பங்கள் இன்னும் திறக்கப்பட்டுள்ளன. இதுவரை பெறுநர்களின் எண்ணிக்கையில் நாங்கள் ஒதுக்கீடு வரம்பை வைக்கவில்லை. தகுதியுடைய பொதுமக்கள் சமூக சேவை மையத்தில் விண்ணப்பிக்கலாம்," என்று அவர் கூறினார்.

இதற்கிடையில், இதுவரை மொத்தம் 8,982 ஸ்கிம் மெஸ்ர ஊசிய எமாஸ் பெறுநர்கள் மற்றும் 426 ஸ்கிம் மெஸ்ர இன்சான் இஸ்திமேவா பெறுநர்கள் தனது பகுதியில் பதிவு செய்யப்பட்டுள்ளனர் என்று புக்கிட் லஞ்சன் சட்டமன்ற உறுப்பினர் புவா பெய் லிங் கூறினார்.

இதற்கிடையில், கெமுனிங் தொகுதியில் மொத்தம் 7,298 ஸ்கிம் மெஸ்ர ஊசிய எமாஸ் பெறுநர்கள் மற்றும் 447 ஸ்கிம் மெஸ்ர இன்சான் இஸ்திமேவா பெறுநர்கள் பதிவு செய்துள்ளனர் என சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் கூறியுள்ளார்.

"மக்களின் நிதி சுமையை குறைக்கும் வகையில் இந்த உதவித் தொகையை RM150 லிருந்து RM200ஆக உயர்த்தப்பட்டது," என்று அவர் கூறினார்.

கடந்த ஆண்டு, மொத்தம் 263,141 பேர் ஸ்கிம் மெஸ்ர ஊசிய எமாஸ் மூலம் பயனடைந்தனர், 6,331 குடும்பங்கள் இறப்பு பலன்களைப் பெற்றனர்.

# சிம்பாங் லீமா, மின்சுடலை புறக்கணிப்பா?

**ஷா ஆலம்-**

கிள்ளான், சிம்பாங் லீமா மின்சுடலையில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்பு பணிகள் முறையாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் கிள்ளான் அரச மாநகர் மன்றத்தின் (எம்.பி.டி.கே.) உறுப்பினர் பி.யுகராஜா கூறினார்.

அந்த மின்சுடலை தொடர்பில் சமூக ஊடகங்களில் வெளியான செய்தியில் உண்மை இல்லை எனக் கூறிய அவர், அங்குள்ள கழிப்பறைகள் பயன்படுத்தும் நிலையில் உள்ளதோடு மூன்று தகன மேடைகளில் இரண்டு தற்போது பயன்பாட்டில் உள்ளதாகச் சொன்னார்.

இந்த மின்சுடலை தொடர்பில் சமூக ஊடங்களில் வெளிவந்த புகார்களைத் தொடர்ந்து கிள்ளான் நாடாளுமன்ற உறுப்பினர் வீ.கணபதிராவ் மற்றும் பண்டமாரான் சட்டமன்ற உறுப்பினர் டோனி லியோங்கின் உத்தரவின் பேரில் சக கவுன்சிலர்கள், மாநகர் மன்றத்தின் பொறியியல் துறை, மற்றும் சுகாதாரத் துறையின் அதிகாரிகளுடன் சம்பந்தப்பட்ட பகுதியில் தாம் ஆய்வினை மேற்கொண்டதாக அவர் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பழுதடைந்த மற்றொரு தகன மேடையை பழுதுபார்க்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி வரும் அக்டோபர் மாத இறுதியில் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கிறோம் என்று அவர் தெரிவித்தார்.

தகன மேடையை பழுதுபார்க்கும் பணி முற்றுப் பெற்றப் பின்னர் மின்சுடலையின் வெளிப்புற வளாகத்தை தரம் உயர்த்தும் பணியை குத்தகையாளர் மேற்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது என யுகராஜா கூறினார்.



# முன்னாள் இந்திய படையின் அர்ப்பணிப்பு

**மோரிப்-**
மேற்கு மலேசியாவின் மோரிப் கடற்பரப்பில் பலம் பொருந்திய இந்திய படையின் 46 வது கடற்பட்டாளம் 1945ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ந்தேதி 42,561 படை வீரர்களுடன் வந்து இறங்கிய 79 ஆண்டு வது நினைவு நாள் கொண்டாட்டத்தில் சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் மாண்புமிகு வீ.பாப்பாராய்டுவும் கலந்துக்கொண்டார்.



இந்த கொண்டாட்டத்தை (PKVIATM) என்ற மலேசிய ஆயுதப்படையின் இந்திய படைவீரர் நல சங்கம், ஏற்பாடு செய்திருந்தது. செப்டம்பர் 9, 1945 அன்று ஜப்பானிய தாக்குதலில் இருந்து மக்களை பாதுகாக்க மோரிப் கடற்கரையில் பிரிட்டிஷ் இந்திய இராணுவம் தரையிறங்கியதை நினைவுகூரும் நாளாக இந்த வருடாந்திர நிகழ்ச்சி நடக்கிறது.

இந்திய தூதரகத்தில் இருந்து கர்னல் பிரவீன், PKVIATM மின் காப்பாளர் மேஜர் ஜெனரல் டத்தோ பத்மன் அவர்களும், தலைவர் ஜெயசேகரன் மற்றும் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்களும் திரளாக இன்றைய நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு ஜப்பானிய காலனித்துவத்தில் இருந்து மலாயாவை விடுவிப்பதற்கான தொடக்கத்தைக் குறிப்பிடுவதுடன், இறுதியில் மக்களுக்கு பாதுகாப்பு அளித்து நமது பிராந்தியத்தில் அமைதியை மீட்டெடுக்க உதவியதாக மாண்புமிகு பாப்பா ராய்டு கூறினார். அவர்களின் வீரம் மோரிப் மணலில் பதிந்திருக்கிறது. சுதந்திரத்திற்காகவும் நீதிக்காகவும் போராடிய இந்தத் துணிச்சலான மாவீரர்களை நாம் ஒன்றாகக் கௌரவிப்போம் என கேட்டுக்கொண்டார்.

# மாணவர்களுக்கு பேருந்து கட்டணம்

**ஷா ஆலம்-**
மாநில அரசு அமல்படுத்தியுள்ள குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கான பேருந்து கட்டண உதவித் திட்டம் மிகவும் பயன்மிக்க ஒன்றாக விளங்குகிறது என்று பத்து தீகா சட்டமன்ற உறுப்பினர் டேனியல் அல் ரஷிட் ஹருண் அமினார் ரஷிட் கூறினார்.



வசதி குறைந்த மாணவர்களின் மூன்று அடிப்படைத் தேவைகளில் ஒன்றாக இந்த பள்ளி பேருந்து கட்டணமும் விளங்குகிறது என்று அவர் சொன்னார்.

பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குவது பெற்றோர்களின் அடிப்படை கடமையாக உள்ள அதே வேளையில் அவர்களுக்கான போக்குவரத்து வசதியை ஏற்படுத்தித் தருவது மிகவும் சவால் மிக்கதாக உள்ளது. பள்ளி பெற்றோர் ஆசிரியர் சங்கங்களின் வாயிலாக பெற்றோர்கள் எங்களிடம் முன்வைக்கும் மனக்குறைகளில் பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதில் நிலவும் சிக்கல் முக்கியமானதாக உள்ளது என அவர் தெரிவித்தார்.

பிள்ளைகளை பள்ளிக்கு அனுப்புவதில் நிலவும் சிக்கல் தவிர்த்து, அவர்களுக்கு பள்ளி உபகரணங்களை வாங்கித் தருவது மற்றும் டியூஷன் வாகுப்புகளை ஏற்பாடு செய்வது ஆகியவையும் பெரும்பாலான பெற்றோர்களுக்கு சிரமமான ஒன்றாக விளங்கிறது.

மாணவர்களுக்கான அடிப்படை தேவையாக விளங்கும் போக்குவரத்து வசதி, பள்ளி உபகரணங்கள் மற்றும் டியூஷன் வகுப்புகள் ஆகிய மூன்று தேவைகளையும் மாநில அரசு தயார் நிறைவேற்றி வருகிறது என்று அவர் குறிப்பிட்டார்.

சிலாங்கூர் அளவுக்கு கல்வி விஷயத்தில் அக்கறை காட்டும் வேறு மாநிலத்தையும் காண முடியாது எனக் கூறிய அவர், இந்த உதவித் திட்டத்தில் தமிழ்ப் பள்ளிகளுக்கும் உரிய வாய்ப்பு வழங்கப்படுகிறது என்று சுங்கை ரெங்கம் தமிழ்ப்பள்ளி மாநாட்டு மையத்தில் நடைபெற்ற தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கான பள்ளி பேருந்துக் கட்டணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் சொன்னார்.

# புற்று நோயால் வாடும் மூவருக்கு உதவி

**செராஸ்-**
புற்றுநோயால் அவதியுறும் பலாக்கோங் சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த மூன்று இந்தியப் பெண்களுக்கு அதன் சட்டமன்ற உறுப்பினர் வெய்ன் ஓங் சுன் நிதியுதவி மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வழங்கினார்.

கடும் நோய்களால் அவதியுற்று வரும் கி. சுபாஷினி (வயது 48), நா.மகாலட்சுமி (வயது 62) மற்றும் து.கலாவதி (வயது 47) ஆகியோரின் சுமைகளை குறைக்கும் நோக்கில் இந்த உதவியை அவர் வழங்கினார்.

கழுத்து பாகப் புற்றுநோயால் சுபாஷினி அவதியுற்று வருகிறார். இவருக்குப் பள்ளிக்குச் செல்லும் சிறார்கள் உட்பட 8 பிள்ளைகள் உள்ளனர்.

மகாலட்சுமி மார்பக புற்றுநோய், நுரையீரல் புற்றுநோய், மாரடைப்பு, நீரிழிவு நோயால் இடது கால் துண்டிப்பு, கண் புரை நோய் என பல்வேறு வகை நோய்களினால் அவதியுற்று வருகிறார்.

இவரையடுத்து, மார்பக புற்றுநோயாளி கலாவதி. பள்ளி செல்லும் சிறார்கள் உட்பட இவருக்கு 7 பிள்ளைகள் உள்ளனர். இவர்கள் அனைவரையும் வெய்ன் ஓங் அவர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று கண்டு நலம் விசாரித்தார்.

இச்சந்திப்பில் வெய்ன் ஓங்குடன், கவுன்சிலர் எட்வின் தாங் மற்றும் பலாக்கோங் சட்டமன்ற சேவை மையத்தின் முதிர்நிலை பணியாளர் மிஷால் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர்.



# மாணவி சிவரஞ்சனிக்கு RM2,000 நிதியுதவி



**ஷா ஆலம்-**
தமிழகத்தின் பாரதியார் பல்கலைக்-கழகத்தில் ஒரு மாத கால இலக்கணப் பயிற்சியை மேற்கொள்ளும் மாணவி எம். சிவரஞ்சனிக்கு சுங்கை ராமால் தொகுதி ஒருங்கிணைப்பாளர் மஸ்வான் ஜோஹார் 2,000 வெள்ளி நிதியுதவி வழங்கினார்.

மலாயா பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில் பட்டப்படிப்பை மேற்கொண்டு வரும் மாணவி சிவரஞ்சனி பாரதியார் பல்கலைக்-கழகத்தில் இலக்கணப் பயிற்சியை மேற்கொள்-வதற்காகக் கடந்த மாத தொடக்கத்தில் தமிழகம் பயணம் மேற்கொண்டதாக சுங்கை ராமால் தொகுதி இந்திய சமூகத் தலைவர் ஏ.சிவக்குமார் கூறினார்.

கல்வித் திட்டத்திற்காக தமிழகம் செல்லும் மாணவிக்கு உண்டாகும் செலவினத்தைக் கருத்தில் கொண்டு உதவி வழங்கும்படி தாம் விடுத்த கோரிக்கையை ஏற்று மஸ்வான் இந்த நிதியுதவிக்கு அங்கீகாரம் வழங்கியதாக அவர் சொன்னார்.

அதே சமயம், பாங்கி நாடாளுமன்றத் தொகுதி மற்றும் மித்ரா எனப்படும் இந்திய சமூக உருமாற்றுப் பிரிவின் உதவியால் மாணவி சிவரஞ்சனிக்கு மடிக்கணினி ஒன்றும் வழங்கப்பட்டது எனவும் சிவக்குமார் தெரிவித்தார்.

மாணவி சிவரஞ்சனிக்கு கல்விப் பயணத்திற்கான நிதியுதவி மற்றும் மடிக்கணினி வழங்கி உதவிய மஸ்வான் ஜோஹார் மற்றும் பாங்கி நாடாளுமன்ற உறுப்பினர் ஷியாரெட்ஸான் ஜோஹான் ஆகியோருக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக சிவக்குமார் மேலும் குறிப்பிட்டார்.



# பரம ஏழ்மை நிலைக்கு முற்றுப்புள்ளி

**கோம்பாக்-**
சிலாங்கூர் மாநிலத்தில் பரம ஏழ்மைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் இலக்கு கடந்த ஜூலை மாதம் அடையப் பட்டதாக மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

சிலாங்கூர் சக்காட் வாரியம், சமூக நல இலாகா மற்றும் இதர அரசு நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்த இலக்கு அடையப் பட்டதாக அவர் சொன்னார்.

ஆக சமீபத்திய தரவுகளின் அடிப்படையில் நாம் இலக்கினை (சுழியம் பரம ஏழ்மை நிலை) அடைந்து விட்டோம். இருப்பினும், ஒவ்வொரு காலாண்டிலும் நமக்கு புதிய தரவுகள் வரும். அதில் சில மாற்றங்கள் இருப்பதற்கான சாத்தியம் உள்ளது என்று அவர் தெரிவித்தார்.

ஏனெனில், வேலை இழப்பு, நோய் உள்ளிட்ட காரணங்களால் மக்களின் வாழ்க்கையில் திடீர் மாற்றங்கள் ஏற்படலாம். ஆகவே, நாம் தொடர்ந்து தரவுகளை மறு ஆய்வு செய்து வருகிறோம் என்றார் அவர்.

டத்தாரான் செலாயாங்கில் நேற்று சுங்கை துவா தொகுதியின் முதலாவது ஏஹ்சான் மார்ட் பேரங்காடியை திறந்து வைத்த பின்னர் செய்தியாளர்களிடம் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

கடந்த ஏப்ரல் மாதம் 861 பேராக இருந்த மிக வறிய நிலையில் உள்ளவர்களின் எண்ணிக்கை ஜூலை மாதம் 245 பேராக குறைந்ததைத் தொடர்ந்து பரம ஏழ்மைக்கு நிரந்தர முற்றுப் புள்ளி வைக்க அரசு நோக்கம் கொண்டுள்ளதாக அமிருடின் முன்னதாகக் கூறியிருந்தார்.

பரம ஏழ்மை நிலையை 2025ஆம் ஆண்டில் முழுமையாக அகற்ற அரசாங்கம் 12வது மலேசியத் திட்டத்தில் இலக்கு நிர்ணயித்திருந்த நிலையில் அதனை இவ்வாண்டிற்குள் அடைவதற்கு ஏதுவாக அரசாங்கம் அந்த இலக்கை மறுநிர்ணயம் செய்திருந்தது.

# உயர்தர தலைவர்களை உருவாக்க அரசியல் கல்வியறிவை மேம்படுத்த அமிருடின் வலியுறுத்துகிறார்

**கோலாலம்பூர்-**
மலேசியாவின் முன்னேற்றத்தை வலுப்படுத்தும் வகையில் எதிர்காலத்தில் உயர் திறன்மிக்க தலைவர்களுக்கு பஞ்சம் ஏற்படாமலிருப்பதை உறுதிப்படுத்த அரசியல் கல்வியறிவு வலுப்படுத்தப்பட வேண்டும்.

மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி, இளம் தலைவர்கள் தங்களைச் சுற்றியுள்ள பிரச்சனைகள் குறித்து விழிப்புடன் இருக்க வேண்டும் என்பதற்காக மேலும் அதிக அரசியல் கல்வி அறிவு புகட்டும் சூழல்களை நாடு கொண்டிருக்க வேண்டும் என்கிறார்.

“மாற்றத்தைக் கொண்டுவர அவரவர் (பொருத்தமான) இடத்தை பயன்படுத்த வேண்டும், உதாரணமாக, நான், மந்திரி புசாராக, என் பாத்திரத்தில் என்னால் முடிந்ததை செய்கிறேன்.

நீங்கள் – ஒரு தாய், தந்தை, சமூகத்தில் ஒருவராக – உங்கள் மட்டத்தில் எது சிறந்தது, எது பொருத்தமானது, எது அனைவருக்கும் நன்மையோ, அதை செய்ய, அந்த மாற்றத்தை நோக்கி நம் முயற்சிகள் எடுக்க வேண்டும்” என்று நேற்று டத்தோ மந்திரி புசார் பாண்டோக் சியாசா சிறப்பு உரையாடல் அமர்வில் கேட்டுக்கொண்டார்.

“உதாரணமாக, இஸ்லாமிய அரசியல் அம்சத்தில், அது எவ்வளவு வெளிப்படையானது மற்றும் அரசியலில் அதை நடைமுறைப் படுத்துவதற்கான வரம்புகள் எங்கே உள்ளது.”தலைமைக்கு, அரசியலமைப்பின் அடிப்படையில் சிந்திக்க கற்றுக் கொடுக்கும் ஒரு வழிகாட்டி வேண்டும் என்றார். இது நமது நாட்டின் அரசியலமைப்பைப் புரிந்துகொள்வதற்கு முக்கியமானது என் கண்களைத் திறந்தது,” என்று அவர் கூறினார்.

அந்த உரையாடல் குறித்து கருத்து தெரிவித்த ஜோர்டான் யார்மோக் பல்கலைக்கழகம் பட்டதாரி நூருல் ஹூடா வேதின் 24, Pondok Siyasah ஒரு தேசிய-மாநிலத்தின் வளர்ச்சிக்கு தேவையானதை விவரிக்கும் கலமாக இருந்ததாக கூறினார்.

“தான் பல ஆண்டுகளாக வேறொரு நாட்டில் வாழ்ந்ததால், சில சமயங்களில் நம் தாய் நாட்டில் உள்ள உண்மை நிலைகளிலிருந்து விலகி நிற்பதால், சில சம்பவங்கள் ஒரு கலாச்சார அதிர்ச்சியாக இருப்பதை ஒப்புக்கொண்டார்.

“இம்மாதிரி நிகழ்ச்சியின் மூலம், தான் மீண்டும் தெளிவடைந்து வருவதை உணர்கிறேன், மேலும் ஒரு மலேசியர் என்ற எனது அடையாளத்தில் மேலும் அர்த்தத்தைக் காண்கிறேன்,” என்று அவர் கூறினார்.

மிதவாத இஸ்லாமிய அரசியலில் கல்வியறிவைப் பரப்பும் அரசியல் கல்வித் திட்டங்களில் பொண்டோக் சியாசாவும் உள்ளது மற்றும் மலேசியாவில் உள்ள சூழ்நிலை யதார்த்தங்கள் உட்பட பண்டைய இஸ்லாமிய சிந்தனை மற்றும் சொற்பொழிவுகளுக்கு இடையிலான தொடர்புகளை விவரிக்க. கடந்த ஆண்டு தொடக்கத்தில் தொடங்கப்பட்ட இந்த திட்டம், தீவிரவாதத்தை நிவர்த்தி செய்வதற்கும், மலேசியச் சூழல்கள் இல்லாத இஸ்லாமிய அரசியல் நூல்களின் நேரடியான தாக்கத்தை தணித்து புரிதலைத் ஏற்படுத்துவதற்கான பாடத்திட்டங்களை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது.

# நடப்புச் சூழலுக்கேற்ப மாநில அரசு செயலாற்ற வேண்டும்

**ஷா ஆலம்-**
ஒவ்வொரு கொள்கை கட்டமைப்பும் அமல்படுத்தப் படுவதையும் அவை ஆக்ககரமான முறையில் சென்றடைவதையும் உறுதி செய்ய மாநில அரசு நிர்வாகம் நடப்புச் சூழலுக்கேற்ப செயலாற்ற வேண்டும் என்று மந்திரி புசார் டத்தோ அமிருடின் ஷாரி வலியுறுத்தினார்.

நடப்பு நீரோட்டத்தைப் பின்தொடர்வதில் ஏற்படும் தாமதம் மக்கள் எதிர்நோக்கும் உண்மையான பிரச்சினைகளை மாநில அரசினால கையாள முடியாத சூழலை ஏற்படுத்தி விடும் என்று அவர் சொன்னார்.

மக்களின் நம்பிக்கையை இழக்கும் பட்சத்தில் நமது நிர்வாகம் பலவீனமானதாகி விடும். மக்களும் நாம் உண்மையானவர்கள் அல்ல எனக் கூறத் தொடங்கிவிடுவார்கள். இதனால் ஏற்படும் அச்சம் காரணமாக நாம் தவறான முடிவுகளை எடுத்து விடுவோம் என்றார் அவர்.

வரும் நவம்பர் மாதம் தாக்கல் செய்யப்படவுள்ள 2025 வரவு செலவுத் திட்டத்தில் சிலாங்கூர் மாநிலத்தின் வட பிராந்திய மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும் என்று அமிருடின் குறிப்பிட்டார்.

அதிகமான முதலீட்டுத் திட்டங்களை முன் எடுத்துள்ளதால் சிலாங்கூரின் வட பகுதிக்கான திட்டத்தை நாம் வரைந்தாக வேண்டும். சாப்டா திட்டத்தின் மூலம் அங்கு மேம்பாடுகளைக் காண முடிகிறது என்று அவர் சொன்னார்.

# பொது-தனியார் கூட்டுத் திட்டம் - மாநில பொருளாதாரத்தை ஊக்குவிக்கும்

**சிப்பாங்-**
பொது மற்றும் தனியார் கூட்டு மேம்பாட்டுத் திட்ட அமலாக்கம் சிலாங்கூரில் பொருளாதாரத்தை ஊக்குவிக்கவும் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும் உதவும் என்று மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி கூறினார்.

ஷா ஆலம் நெடுஞ்சாலை ஷா ஆலம் - உலு கிளாங் நெடுஞ்சாலை, டாமன்சாரா-ஷா ஆலம் நெடுஞ்சாலை மற்றும் செத்தியா வங்சா-பந்தாய் நெடுஞ்சாலை உள்ளிட்டவை குறிப்பிடத்தக்க பலன்களைத் தரும் திட்டங்களில் அடங்கும் என்று அவர் கூறினார்.

இதர கூட்டுத் திட்டங்களில் கின்றாரா தீயணைப்பு நிலையம், மின்-நில நிர்வாக முறை, புக்கிட் தாகார் சுகாதார குப்பை அழிப்பு மையம், புஞ்சாக் ஆலம் மற்றும் டிங்கில் மாரா பல்கலைக்கழக வளாகம் மற்றும் மேற்கு மற்றும் வடக்கு துறைமுகங்கள் ஆகியவையும் அடங்கும்.

பொது தனியார் திட்டத்தின் நிர்வாகத்தை வலுப்படுத்தும் நோக்கில் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் அவர்களால் இங்கு தொடக்கி வைக்கப்பட்ட பிகாஸ் 2030 தொடக்க விழாவில் அமிருடின் இதனைத் தெரிவித்தார்.

இந்தத் திட்டம் 6,000 முழுநேர வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தும் என்றும் இதனால் ஏற்படக்கூடிய பொருளாதார மற்றும் சமூகவியல் தாக்கம் ஒட்டுமொத்த மக்களும் பயன்பெறுவதற்குரிய வாய்ப்பினை உருவாக்கும் என்றும் அமிருடின் கூறினார்.



# இ-லேண்ட் முறை மக்கள் காத்திருக்கும் நேரத்தை குறைக்கும்

**கிள்ளான்-**

கடந்த ஆண்டு அக்டோபர் முதல் செயல்படுத்தப்பட்ட இ-லேண்ட் முறையானது மாநிலத்திற்கு நன்மை அளிப்பது. நில அலுவலகத்தில் (PDT) காத்திருக்கும் நேரத்தை 92 சதவீதம் அல்லது 30 நிமிடங்களுக்கு குறைக்கவல்லது என்றார்.

சிலாங்கூரில் உள்ள நில அலுவலக சேவை கவுண்டர்களில் கிள்ளான் மாவட்ட அலுவலகத்தில் மட்டும் சேவை கவுண்டர்களின் எண்ணிக்கை 24 லிருந்து 15 ஆகக் குறைந்தது என்று கிள்ளான் மாவட்ட அதிகாரி அம்ரி இஸ்மாயில் விளக்கினார்.

கிள்ளான் நில அலுவலகத்தில் சுமார் 100 சமூகத் தலைவர்கள் கலந்து கொண்ட இ-லேண்ட் முறையை நடைமுறைப்படுத்துவது குறித்து ஓராண்டு விளக்க அமர்விற்கு பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.

இதற்கிடையில், இ-லேண்ட் முறையை மேம்படுத்த வேண்டியதன் அவசியத்தை அடையாளம் காண்பதுடன், அதிகமான குடியிருப்பாளர்களுக்கு தகவலளிக்க இந்த விளக்க அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அம்ரி கூறினார்.

கிள்ளான் நில அலுவலகத்தில் குறிப்பாக முதியோர் மற்றும் பயனர்களுக்கு நட்புடன் இருப்பதை உறுதி செய்வதற்காகவும் அவர்களின், கருத்தைக் கேட்பதற்கும் விளக்க அமர்விற்கு ஏற்பாடு செய்யப் பட்டதாக அவர் விளக்கினார்.

"இந்த முறையை நகர்ப்புற சமூகம் மட்டுமல்ல, கிராமப்புற மக்களும் அனுபவிக்க வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். அவர்கள் மரியாதையுடன் நடத்தப்பட வேண்டும்," என்று அவர் கூறினார்.

# ஹோம் ஸ்டே தங்குமிடங்களை சட்டப்பூர்வமாக்க நடவடிக்கை



**ஸ்ரீ கெம்பாங்கன்-**

விவசாய நிலங்களில் மேற்கொள்ளப்படும் அங்கீகாரமற்ற பொருளாதார மேம்பாடு திட்டங்களை சமாளிக்க சிலாங்கூர் அரசாங்கம் கிராமப்புற தங்குமிடங்களை (ஹோம்ஸ்டே) அங்கீகரிக்க தக்க மேம்பாடு வழிகாட்டிகளை செயல்படுத்தும்.

ஹோட்டல் போன்ற பதிவு பெற்ற தங்குமிட துறையுடன் போட்டியிடும் வீடுகளை (ஹோம்ஸ்டே) தங்குமிடங்களாக்கும் முறையை சட்டப்பூர்வமாக்க, அவை நிர்ணயிக்கப்பட்ட தரநிலை படி செயல்படுவதை உறுதி செய்யவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சுற்றுலா ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ இங் சுய் லிம் கூறினார்.

"விவசாய நிலத்தில் வீடுகள் கட்டப்படுவதால், ஹோட்டல் நடத்துனர்களிடமிருந்து புகார்கள் வருவதோடு, பிரச்சனையும் உள்ளது என்பதை ஒப்புக் கொள்கிறோம், எனவே, அவற்றை சட்டப்பூர்வமாக்க உதவ முயற்சிக்கிறோம்.

"இந்த இரண்டு தொழில்களும் தொடர்ந்து வளர வேண்டும் என்று மாநில அரசு விரும்புகிறது. ஏனெனில் அவை தனிப்பிட்ட அம்சங்களைப் கொண்டிருக்கின்றன. மேலும் நாங்கள் சிறப்பாக ஒருங்கிணைப்போம்," என்று அவர் கூறினார்.

சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், தங்கும் இடத்தில் தேவையற்ற சம்பவம் நடந்தால் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் விளக்கினார்.




# ஏற்றுமதி வணிகத்தில் ஈடுப்பட உதவி வழங்கப்படும்

**ஷா ஆலம்-**

உலகஅளவில்தொடர்புவலையமைப்பை வலுப்படுத்தவும் போட்டித்தன்மையை அதிகரிக்கவும் அதிகமான சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு (SMEs) ஏற்றுமதி வணிகத்தில் ஈடுப்பட உதவி வழங்கப்படுகிறது.

சிலாங்கூர் ஏற்றுமதி தினத்தை ஏற்பாடு செய்வதன் மூலம் 147 நிறுவனங்களைச் சேர்ந்த 230 தொழில் முனைவோருக்கு தங்களின் சந்தையை விரிவுபடுத்துவதற்கான வாய்ப்பு வழங்கப் பட்டுள்ளதாக தொழில்முனைவோர் ஆட்சிக்குழு உறுப்பினர் நஜ்வான் ஹலிமி கூறினார்.

மலேசிய வெளிநாட்டு வர்த்தக மேம்பாட்டுக் கழகம் (மெட்ராட்) சிலாங்கூர் மாநில வளர்ச்சிக் கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளும் இந்த இரண்டாவது பதிப்பு ஷா ஆலம் மாநாட்டு மையத்தில் நடைபெற்றது.

மாநில பொருளாதார திட்டமிடல் பிரிவின் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஒன்பது தொழில் முனைவோர் இம்மாத மத்தியில் நான்னிங், சீனாவிற்குக் கொண்டு செல்லப்பட்டு வர்த்தகக் கண்காட்சியில் தங்களுக்கான வாய்ப்பை அமைத்து கொள்வார்கள் என்று அவர் கூறினார்.

இதற்கிடையில், சிலாங்கூர் ஏற்றுமதி தினம் மாநிலத்தில் வர்த்தகத்தின் அளவையும் மற்றும் ஏற்றுமதி வணிகத்தில் நிறுவனத்தின் ஈடுப்பாட்டை அதிகரிக்கும் என்று "Matrade" அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

# 80 லட்சம் சுற்றுப் பயணிகளை ஈர்க்க சிலாங்கூர் இலக்கு

**சுபாங் ஜெயா-**

மாநில அரசின் ஏற்பாட்டிலான 2025 சிலாங்கூருக்கு வருகை தாருங்கள் ஆண்டை முன்னிட்டு எண்பது லட்சத்திற்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க சிலாங்கூர் அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது.

சுற்றுலா பயணிகளுக்கு குறிப்பாக சுற்றுலாத் துறையினருக்கு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய பல்வேறு திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று சுற்றுலாத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் டத்தோ இங் சுயி லிம் கூறினார்.

சுற்றுலாப் பயணிகளின் வருகை மலேசியாவுக்கு குறிப்பாக சிலாங்கூருக்கு பொருளாதார வளர்ச்சியைக் கொண்டு வரும். வருமானத்தை ஈட்டித் தருவதற்கு இரண்டு முதல் மூன்று ஆண்டுகள் வரை பிடிக்கக் கூடிய மற்ற முதலீடுகளுடன் ஒப்பிடுகையில் சுற்றுலாத் துறை குறுகிய காலத்தில் பொருளாதார அனுகூலங்களை வழங்கும் என்று அவர் சொன்னார்.

சுற்றுலாத் துறை தொடர்ந்து வளர்ச்சி கண்டு வருவதால் சுற்றுலா தொடர்பான அறிவாற்றலை வளர்த்துக் கொள்ளும் அதே வேளையில் நாட்டின் சுற்றுலா இடங்களைப் பிரபலப்படுத்தும் நடவடிக்கையிலும் ஈடுபடும்படி சுற்றுலாத் துறையினரை அவர் கேட்டுக் கொண்டார்.



சுற்றுலாத் துறையினர் வெளிநாடுகளுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏற்ற தளங்களை உருவாக்கித் தருவதில் அரசாங்கம் எப்போதும் உதவி வழங்கி வருவதாகவும் அவர் சொன்னார்.

வெளிநாடுகளில் உள்ள சுற்றுலாத் துறையினருடன் அணுக்கமான நட்புறவை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஏதுவாக டூரிசம் சிலாங்கூர் மற்றும் டூரிசம் மலேசியா உள்நாட்டுச் சுற்றுலாத் துறையினரை வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்கின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

# ஊத்தாங் மெலிந்தாங் இரண்டாவது பாலம் 2026 முற்றுப் பெறும்



**சபாக் பெர்ணம்-** சபாக் பெர்ணம் மாவட்டத்தில் உள்ள சுங்கை ஆயர் தாவாரையும் பேராக் மாநிலத்தின் ஊத்தாங் மெலிந்தாங்கையும் இணைக்கும் இரண்டாவது பாலம் எதிர்வரும் 2026 டிசம்பர் மாதம் பூர்த்தியாகும் என்று மந்திரி புசார் கூறினார் .

கடந்த 2022ஆம் ஆண்டு கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்ட இந்த 2.9 கிலோ மீட்டர் நீளம் கொண்ட பாலம் இரு நகரங்களுக்கிடையிலான பயண நேரத்தை 30 நிமிடங்களாகக் குறைக்கும் என்று டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரி தெரிவித்தார்.

மொத்தம் 2 கோடியே 10 லட்சம் வெள்ளி செலவில் நிர்மாணிக்கப்படும் இந்தப் பாலம் சுங்கை ஆயர் தாவாரையும் பேராக் மாநிலத்தின் ஊத்தாங் மெலிந்தாங்கையும் இணைப்பதோடு வாகனமோட்டிகளின் வசதிக்காக 'யு' வளைவுகளையும் கொண்டுள்ளது என அவர் குறிப்பிட்டார்.

பேராக் மாநிலத்தில் நில மீட்பு மற்றும் பால வடிவமைப்பு உள்ளிட்ட காரணங்களால் இப்பால நிர்மாணிப்பில் தாமதம் ஏற்பட்டது. ஆகவே, இத்திட்டம் மறுஅட்டவணையிடப்பட்டு எதிர்வரும் 2026ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என அவர் சொன்னார்.

பெர்ணம் ஆற்றின் குறுக்கே புதிய பாலம் அமைக்கப்படும் என்று கடந்த 2021 ஆம் ஆண்டு மாநில அரசாங்கம் அறிவித்தது. இது 12வது மலேசியா திட்டத்தின் கூட்டரசு கிராமப்புற சாலை திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படும்.

# கல்வியைக் கைவிட்ட மாணவர்களுக்கு சிறப்பு திவேட் திட்டம்

**குளுவாங்-** நான்காம் படிவக் கல்வியை பாதியில் கைவிட்ட மற்றும் படிப்பில் நாட்டமில்லாத மாணவர்களுக்கு உதவும் வகையில் சிறப்பு தொழில்நுட்ப மற்றும் தொழில்கல்வித் திட்டத்தை (திவேட்) அரசாங்கம் அமல்படுத்தவிருக்கிறது.

இந்த திட்டத்தை இவ்வாண்டு இறுதியில் அமல்படுத்துவது தொடர்பில் தாம் கல்வியமைச்சர் ஃபாட்லினா சீடேக்குடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாக துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமது ஜாஹிட் ஹமிடி கூறினார்.

கல்வியைத் தொடர்வதில் ஆர்வம் இன்றி இருக்கும் மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கும் நோக்கில் திவேட் கல்விக்கூடங்களில் நுழைவதற்கான எழுத்துப்பூர்வ முறையில் அல்லாத சிறப்புத் தேர்வினை சம்பந்தப்பட்ட மாணவர்களுக்கு நடத்துவது குறித்து நாங்கள் விவாதித்து வருகிறோம் என்ற அவர் சொன்னார்.

எஸ்.பி.எம். தேர்வினை எழுதாவிட்டால் எதிர்காலம் இல்லாமல் போகும் என நினைக்க வேண்டாம். திவேட் கல்விச் சூழியல் முறையில் எஸ்.பி.எம். இல்லாத மாணவர்களும் எஸ்.பி.எம். தேர்வுக்கு இணையான திவேட், மலேசிய தொழில்திறன் சான்றிதழ் பயிற்சி (எஸ்.கே.எம்.) 1 மற்றும் 2, டிப்ளோமாவுக்கு இணையான எஸ்.கே.எம். 3,4 மற்றும் 5 பயிற்சிகளில் பங்கேற்க முடியும் என்று அவர் குறிப்பிட்டார்.

TVET MALAYSIA

மக்கோத்தா சட்டமன்ற இடைத் தேர்தலை முன்னிட்டு வட்டார இந்திய சமூகத்துடனான சந்திப்பு நிகழ்வில் உரையாற்றிய போது அம்னோ தலைவருமான அவர் இவ்வாறு கூறினார்.

இந்த எஸ்.கே.எம். திட்டத்தில் அதிகமான இந்திய இளைஞர்கள் பங்கேற்பதை ஊக்குவிக்கும் பொருட்டு மஇகா தேசியத் தலைவர் டான்ஸ்ரீ எஸ்.ஏ. விக்னேஸ்வரன் உள்ளிட்ட இந்திய சமூகத் தலைவர்களுடன் தாம் பேச்சு நடத்தி வருவதாக ஜாஹிட் குறிப்பிட்டார்.

# 2.0 மெகா சாலை மேம்பாட்டு திட்டம்

**சபாக் பெர்ணம்-** எதிர்வரும் செப்டம்பரில் தொடங்கும் 2.0 மெகா சாலை மேம்பாட்டு திட்டமானது கடுமையாகச் சேதமடைந்த சாலைகளில் மீது கவனம் செலுத்துகிறது.

மாநில சாலை பராமரிப்பு நிறுவனமான இன்ஃப்ராசெல், அதன் மேம்பாட்டு பணி தொடங்கும் முன், முக்கியமான சாலைகளை ஆய்வு செய்து வருகிறது என உள்கட்டமைப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் இஷாம் அசிம் கூறினார்

சாலைகள் அடையாளம் காணப்பட்ட பிறகு, நிர்ணயிக்கப்பட்ட அளவு கோல்களின்படி முன்னுரிமை அடிப்படையில் எதிர்வரும் செப்டம்பரில் இந்த திட்டத்தை தொடங்குவோம், என்றார்.

தஞ்சோங் காராங்கில் உள்ள ஜாலான் பாகான் பாசிரில் சீரமைப்புப் பணிகளை ஆய்வு செய்த போது அவர் இவ்வாறு கூறினார்.

2021 முதல் கடந்த ஆண்டு வரை, பயனர் வசதியை உறுதி செய்வதற்காக 39,000க்கும் மேற்பட்ட சாலை மேம்பாட்டு பணிகள் இன்ஃப்ராசெல்லால் மேற்கொள்ளப்பட்டன.



# வெள்ளத் தணிப்பு திட்டங்கள் சீராக இயங்குகின்றன

**சபக் பெர்ணம்-** மாநில அரசால் செயல்படுத்தப்படும் வெள்ளத் தணிப்புத் திட்டங்கள் சீராக இயங்கி வருவதாக உள்கட்டமைப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், ஒரு சில இடங்களில் மட்டுமே பயன்பாடுகளை அகற்றுவது மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் அனுமதி தொடர்பாக சில சிக்கல்களை சந்தித்ததாக இஷாம் அசிம் கூறினார்.

"மாநில அரசு எப்போதும் அனைத்து வெள்ளத் தணிப்பு திட்டங்களையும் உன்னிப்பாக கண்காணித்து வருகிறது, இதனால் அவை நிர்ணயிக்கப்பட்ட நேரத்திற்கு ஏற்ப செயல்படுகின்றன மற்றும் வெள்ளப் பிரச்சனை முற்றிலும் தீர்க்கப்படும்," என்று அவர் கூறினார்.

ஜாலான் பகான் பாசிர், தஞ்சோங் காராங் சாலை பழுதுபார்ப்பு பணிகளை ஆய்வு செய்து பின்னர் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஆண்டு, நீர்பாசனம் மற்றும் வடிகால் துறைக்கு நான்கு வெள்ளத் தணிப்புத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு மத்திய அரசு RM455.2 மில்லியனை அங்கீகரித்ததாக இஷாம் தெரிவித்ததாகக் கூறப்பட்டது.

எட்டு திட்டங்களை உள்ளடக்கிய RM41.4 மில்லியன் வடிகால் பங்களிப்பு அறக்கட்டளை கணக்கு ஒதுக்கீட்டிற்கு கூடுதலாக 73 வெள்ளம் தணிப்பு திட்டங்களுக்கு தொடர்புடைய துறைகளுக்கு RM615.06 மில்லியன் ஒதுக்க சிலாங்கூர் ஒப்புதல் அளித்தது.



# மாமாகெர்ஜா திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்



**ஷா ஆலம்-**
சிலாங்கூரில் பணிபுரியும் தாய்மார்களுக்கு RM1,000 ரொக்கம் வழங்கும் மாமாகெர்ஜா திட்டம் 5,000 பெறுநர்களின் இலக்கை எட்டுவதற்கு இன்னும் திறக்கப்பட்டுள்ளது.

கடந்த 11 ஜூலை மாத நிலவரப்படி மொத்தம் 4,042 பணிபுரியும் தாய்மார்கள் குழந்தைப் பராமரிப்புச் செலவுகளை ஈடுசெய்யும் நோக்கில் இந்த உதவியைப் பெற்றுள்ளனர். இது பெண்களை வேலைவாய்ப்புத் துறையில் தொடர்ந்து இருப்பதற்கு ஊக்குவிப்பதாகப் பெண்கள் மேம்பாட்டு ஆட்சிக்குழு உறுப்பினர் அன்பால் சாரி கூறினார்.

"முன்னதாக, மாமாகெர்ஜா திட்டம் மொத்தம் 6,094 விண்ணப்பங்களைப் பெற்றது. அதில் மொத்தம் 4,042 பேர் வெற்றிகரமாகப் பண உதவியைப் பெற்றனர், அதாவது பணம் நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பப்பட்டது, அதே நேரத்தில் 2,052 விண்ணப்பங்கள் தகுதித் தேவைகளைப் பூர்த்தி செய்யாததால் நிராகரிக்கப்பட்டன.

செலாங்கா செயலி அல்லது mamakerja.selangkah.my இணையதளம் மூலம் விண்ணப்பங்களைச் செய்யலாம். எந்தவொரு தகவலையும் Selcare ஹாட்லைன் 1-800-22-6600க்கு அல்லது info@selcare.my மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

RM5 மில்லியன் ஒதுக்கீட்டை உள்ளடக்கிய இந்தத் திட்டம், RM8,000க்கு மிகாமல் குடும்ப வருமானத்துடன் 12 வயதுக்குட்பட்ட மூன்று குழந்தைகளைக் கொண்ட 5,000 பணிபுரியும் பெண்களுக்குப் பயனளிக்கிறது.

**பிற தகுதித் தேவைகள் பின்வருமாறு:**

வேலை மற்றும் சுயதொழில் செய்யும் பெண்கள்

– சிலாங்கூர் குடிமகன் (சிலாங்கூரில் பிறந்த அல்லது 10 ஆண்டுக்கு மேல் இங்கு வசிப்பவர்களாக இருக்க வேண்டும்)

– சிலாங்கூரின் வாக்காளராக இருத்தல்

– குடும்ப வருமானம் RM8,000 மற்றும் அதற்கும் குறைவக இருத்தல்

– உள்நாட்டு வருவாய் வாரியம் (LHDN) கணக்கு அல்லது சேமநிதி (EPF) பங்களிப்பு உள்ள நபர்கள்

அசோ பிந்தார், பிங்காஸ் மற்றும் துனாஸ் ஆகிய உதவிகளைப் பெறாதவர்களாக இருக்க வேண்டும் என கூறுகிறது

# குழந்தை வளர்ப்பு பயிற்சி
## 30 பேர் பங்கேற்பு

**ஷா ஆலம்-**
ஷா ஆலம் மாநகர் மன்ற உறுப்பினர் திருமதி லோகேஸ்வரி சாமிநாதன் ஏற்பாட்டில் தாய்மார்களுக்கான பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு மற்றும் குழந்தை வளர்ப்பு பயிற்சிப் பட்டறை அண்மையில் நடைபெற்றது.

இங்குள்ள மாநகர் மன்றத்தின் 14வது மண்டல அலுவலகத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிற்றுக் கிழமை ஆகிய இரு தினங்கள் நடைபெற்ற இந்த பயிற்சியை கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பிரகாஷ் தொடக்கி வைத்தார்.

பிறந்து ஒரு மாதம் தொடங்கி 12 மாதங்கள் வரையிலான குழந்தைகளைப் பராமரிப்பது குறித்த வழிமுறைகளை தாய்மார்களுக்கு பயிற்றுவிக்கும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த பயிற்சிப் பட்டறையில் 30 பேர் கலந்து கொண்டனர்.

இந்தப் பயிற்சி பிள்ளைகளை முறையாக வளர்ப்பது குறித்த விஷயங்களை மட்டுமின்றி தங்கள் பிள்ளைகளை பராமரிப்பதற்கும் அவர்களை பயிற்றுவிப்பதற்கும் தேவையான அனுபவங்களையும் பெற்றோர்களுக்கு வழங்குகிறது என்று அவர் கூறினார்.

அண்மைய காலமாக குழந்தைகள் ஆட்டிஸம் போன்ற பிரச்சினைகளால் பாதிக்கப்படுவது அதிகரித்து வருகிறது. குழந்தைகளை முறையாக பராமரிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு ஏற்படும் குறைபாடுகளை இளம் பிராயத்திலே கண்டறிந்து தேவையான சிகிச்சை மற்றும் பயிற்சிகள் மூலம் அவர்களை குணப்படுத்துவதற்குரிய வாய்ப்பு கிட்டும் என அவர் சொன்னார்.

சட்டமன்ற சேவை மையத்தின் ஆதரவோடு மாநகர் மன்றத்தின் 14வது மண்டலம் ஏற்பாடு செய்திருந்த இந்த பயிற்சிப் பட்டறையில் 30 பெண்கள் கலந்து கொண்டதாக அவர் கூறினார்.




# மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்கள் தொடரும்

**ஷா ஆலம்-**
மாற்றுத் திறனாளிகளுக்கான திட்டங்களை தொடர மாநில அரசு கடப்பாடு கொண்டுள்ளது. அத்தரப்பினர் தங்கள் திறமையை வளர்த்துக் கொள்வதன் மூலம் சுயகாலில் நின்று சொந்தமாக வருமானம் ஈட்டுவதற்கு ஏதுவாக இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது.

பதினேழு முதல் 25 வயது வரையிலான மாற்றுத் திறனாளி இளைஞர்களுக்குக் கல்வி மற்றும் வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதற்காக சுய வாழ்க்கை ஆதரவு மையத் (ஐ.எல்.எஸ்.சி.) திட்டம் கடந்தாண்டு அறிமுகப்படுத்தப்பட்டதாக சமூக நலத் துறைக்கான ஆட்சிக்குழு உறுப்பினர் அன்பால் ஷாரி கூறினார்.

இந்த திட்டத்தின் கீழ் அந்த இளைஞர்கள் செஷையர் சமூக நல இல்லம், தேசிய இளைஞர் திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தேசிய இளைஞர் உயர் திறன் கழகம் ஆகிய இடங்களில் தங்கள் கல்வியைத் தொடர்ந்ததாக அவர் குறிப்பிட்டார்.

மாற்றுத் திறனாளி நட்புறவு கொள்கை எதிர்வரும் டிசம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகக் கூறிய அன்பால் இதன் மூலம் அத்தரப்பினரின் நலன் காக்கப்படும் என்பதோடு சுகாதாரம், கல்வி, சட்டம், வேலை வாய்ப்புகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் மீது கவனம் செலுத்தப்படும் என்றார் அவர்.

# புக்கிட் மெலாவத்தி, கோத்தா கெமுனிங் தொகுதிகளில் 952 பேருக்கு பிங்காஸ் உதவி திட்டம்



**ஷா ஆலம்-**
புக்கிட் மெலாவத்தி சட்டமன்றத் தொகுதியைச் சேர்ந்த நூறு இந்தியர்கள் உட்பட 300 பேர் பிங்காஸ் எனப்படும் சிலாங்கூர் மக்கள் நல்வாழ்வு உதவித் திட்டத்தின் கீழ் இரண்டு ஆண்டுகளுக்கு உதவி பெறுவர். இங்கு பெரும்பாலும் தோட்டத் தொழிலாளர்களுக்கு முன் உரிமை அளிக்கப்படுவதாகவும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களை பொருளாதார ரீதியாக உயர்த்தி விடும் நோக்கில் சிலாங்கூரில் மட்டும் அமல்படுத்தி வரும் இந்த திட்டத்தின் வாயிலாக பி40 பிரிவைச் சேர்ந்தவர்கள் மாதம் வெள்ளி 300 யை ஈராண்டு காலத்திற்கு உதவித் தொகையாக பெறுவர் என புக்கிட் மெலாவத்தி தொகுதி ஒருங்கிணைப்பாளர் தீபன் சுப்பிரமணியம் கூறினார்.

அதே வேளையில் கோத்தா கெமுனிங் தொகுதியில் 652 நபர்களுக்கு ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளதாக அத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பிரகாஷ் கூறினார். அதில் மொத்தம் 450 குடியிருப்பாளர்கள் பிங்காஸ் மூலம் பலன்களைப் பெற்றுள்ளனர் எஞ்சிய 202 ஒதுக்கீட்டிற்கான மதிப்பாய்வை தற்போது தனது தரப்பு நடத்தி வருவதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பிரகாஷ் தெரிவித்தார். இது விரைவில் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

"நாங்கள் 1,500க்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் பெற்றுள்ளோம், ஆனால் ஒதுக்கீடு 652 நபர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது. எனவே, அவர்களில் உண்மையிலேயே உதவி அதிகம் தேவைப்படுபவர்களை அடையாளம் காண நாங்கள் மதிப்பாய்வு செய்து வருகிறோம் என்றார் சட்டமன்ற உறுப்பினர் எஸ். பிரகாஷ்.

"இருப்பினும், வெற்றி பெறாத மற்றும் உதவி தேவைப்படும் விண்ணப்பங்களுக்கு உணவு கூடை திட்டத்தின் மூலம் உதவி வழங்கப்படுகிறது," என்று அவர் கூறினார்.

இதுவரை 7,160 பிங்காஸ் ஒதுக்கீடுகள் மீதமுள்ளதாகவும், தகுதியானவர்கள் மட்டும் 24 மாதங்களுக்கு மாதந்தோறும் RM300 பெறுவதை உறுதி செய்வதற்காக விண்ணப்பதாரர்கள் பட்டியல் சோதனை செய்யப்பட்டு வருவதாகவும் மக்கள் நலன் ஆட்சிக்குழு உறுப்பினர் அன்பால் கூறினார்.

ஜூலை 5 அன்று, அதிகமான மக்கள் பலன் அடைவதை உறுதி செய்வதற்காக, விண்ணப்பத் தேவைகளில் சில தளர்த்தப் பட்டதனால் மேலும் பலருக்கு வாய்ப்பளிக்க இடங்கிடைத்தாக அன்பால் அறிவித்தார்



# மேற்கூரை அமைப்பதற்காக RM 48,445 ஒதுக்கீடு

**ஷா ஆலம்-**

USJ 8 இடைநிலைப்பள்ளியின் நடைபாதையில் மேற்கூரை அமைப்பதற்காக சுபாங் ஜெயா தொகுதி மொத்தம் RM48,445 ஒதுக்கீடு செய்தது.

மேலும், மாநில சட்டமன்ற உறுப்பினர் ஒதுக்கீட்டின் கீழ் மிகப்பெரிய நிதியும் பள்ளியின் இரண்டாவது பாதையின் நுழைவாயிலை பெரிதாக்க பயன்படுத்தப்பட்டதாக சட்டமன்ற உறுப்பினர் மிஷல் இங் மேய் சீ கூறினார்.

"மாணவர்கள் தங்கள் பெற்றோருக்காகக் குறிப்பாக மழை பெய்யும் போது காத்திருப்பதை எளிதாக்குவதற்கு மேற்கூரை முக்கியமானது என்பதால், இந்த கட்டுமானத்திற்காகப் பள்ளியிலிருந்து விண்ணப்பம் பெற்றேன்.

USJ 8 இடைநிலைப்பள்ளி மாணவர்களில் சுமார் 60 சதவீதம் பேர் B40 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதால், இந்த ஒதுக்கீட்டிற்கு நான் ஒப்புதல் அளித்தேன், என்று அவர் அறிக்கை ஒன்றில் கூறினார்.

91 மீட்டர் நீளமும் 2.8 மீட்டர் அகலமும் கொண்ட மேற்கூரை நிறுவும் பணி ஜூலை 12 ஆம் தேதி முழுமையாக நிறைவடைந்த தாகவும் இதன் மூலம் 900 மாணவர்கள் பயன்பெற முடியும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் மிஷல் விளக்கமளித்துள்ளார்.

இந்த மேம்பாட்டு பணிகள் மூலம் அப்பள்ளி மாணவர்கள் பாதுகாப்பாகவும் வசதியாகவும் இருப்பார்கள் என்று நம்புகிறேன், என அவர் கூறினார்.

# அந்நியர்கள் சம்பந்தப்பட்ட குற்றங்கள் அதிகரிப்பு



**ஷா ஆலம்-**

தாமான் ஸ்ரீ மூடா மற்றும் கோத்தா கெமுனிங் வட்டாரத்தில் அந்நியத் தொழிலாளர்கள் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்களின் எண்ணிக்கை அண்மைய காலமாக அதிகரித்து வருவது குறித்து கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் எஸ். பிரகாஷ் கவலை தெரிவித்துள்ளார்.

பொது அமைதிக்கும் வட்டார மக்களின் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தக்கூடிய இத்தகையச் சம்பவங்களைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்கும்படி உள்துறை அமைச்சர் டத்தோஸ்ரீ சைபுடின் இஸ்மாயில் நசுத்தியோனை அவர் கேட்டுக் கொண்டார்.

நாட்டின் சட்டதிட்டங்களை அந்நியத் தொழிலாளர்கள் புரிந்து கொள்ளும் அதேவேளையில் அதனை பின்பற்றி நடப்பதும் அவசியமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அந்நிய நாட்டினர் சம்பந்தப்பட்ட குற்றச் செயல்கள் தவிர்த்து, முறையான ஆவணமில்லாத அந்நிய பிரஜைகளின் குடியேற்றம், அவர்களின் குடியிருப்புகளில் காணப்படும் தூய்மையின்மை மற்றும் சுற்றுவட்டார மக்களுக்கு அவர்களால் ஏற்படும் தொந்தரவு ஆகியவையும் பிரச்சனைக்குரிய விஷயங்களாக உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அந்நியக் குடியேறிகளின் குடியிருப்புகள் பெரும்பாலும் சுத்தமாக இருப்பதில்லை. இதனால் அசௌகரியமான சூழலும் வட்டார மக்களுக்கு நோய் பரவும் அபாயமும் ஏற்படுகிறது. ஆகவே, தங்கள் தொழிலாளர்கள் முறையான ஆவணங்களைக் கொண்டிருப்பதை முதலாளிகள் உறுதி செய்யும் அதேவேளையில் தூய்மை தொடர்பான விதிமுறைகளை அவர்கள் பின்பற்றுவதையும் கண்காணிக்க வேண்டும் என்றார் அவர்.

அந்நியத் தொழிலாளர்களின் தவறான செயல்களுக்கு முதலாளிகளே முழு பொறுப்பு ஏற்க வேண்டும் என வலியுறுத்திய பிரகாஷ், தங்கள் ஊழியர்கள் குற்றச் செயல்களில் ஈடுபடாமல் இருப்பது உறுதி செய்யும் பொறுப்பை முதலாளிகள் முறையாக நிறைவேற்றுவதற்கு ஏதுவாக உள்துறை அமைச்சு சட்ட அமலாக்கத்தை வலுப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார்.

# 112 எஸ்பிஎம் மற்றும் எஸ்டிபிஎம் மாணவர்களுக்கு ஊக்கத்தொகை



**ஷா ஆலம்,-**

கோலா குபு பாரு தொகுதியில் எஸ்பிஎம் மற்றும் எஸ்டிபிஎம் தேர்வுகளில் சிறந்து விளங்கிய 112 மாணவர்களுக்கு மொத்தம் RM24,050 ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

இந்த ஊக்கத்தொகை 5A மற்றும் அதற்கு மேற்பட்ட தேர்வு முடிவுகளைப் பெற்ற 106 எஸ்பிஎம் மாணவர்களுக்கும் மீதமுள்ள 4A மற்றும் 3.75 சராசரி புள்ளியை பெற்ற ஆறு எஸ்டிபிஎம் மாணவர்களுக்கும் வழங்கப்பட்டது என பாங் சோக் தாவ் கூறினார்.

மேலும், எஸ்பிஎம் மாணவர்களுக்கு RM100 (5A), RM150 (6A), RM200 (7A), RM250 (8A), RM300 (9A) மற்றும் 10A மற்றும் அதற்கு மேல் RM350 வழங்கப்பட்டது என அவர் கூறினார்.

"106 எஸ்பிஎம் மாணவர்களுக்கு மொத்தம் RM21,650 வழங்கப்பட்டது. அதே நேரத்தில்மீதத்தொகைRM2,400ஆறுஎஸ்டிபிஎம்மாணவர்களுக்குவிநியோகிக்கப்பட்டது. மொத்த வெகுமதித் தொகை RM24,050 ஆனது" என்று அவர் முகநூலில் தெரிவித்தார்.

தகுதியுடைய அனைத்து இனங்களும் பயன்பெறும் மடாணி மலேசியா நீதியின் கோட்பாட்டிற்கு இணங்க இத்திட்டம் அமைந்துள்ளது என்றும் அவர் வலியுறுத்தினார்.

# ஸ்ரீதீமா மண்டபம் புதுப்பிப்பு



**செராஸ்-**

இந்தியர்களுக்காக அதிக-மான திட்டங்களை மேற்கொள்வதற்கு ஏதுவாக பலாக்கோங் சட்டமன்ற உறுப்பினர் வெய்ன் ஓங் சுங் வெய் ஏற்பாட்டில் இங்குள்ள ஸ்ரீதீமா பொது மண்டபம் புதுப்பிக்கப்பட்டது.

பொங்கல், தீபாவளி, கிறிஸ்துமஸ் கொண்டாட்டம், ரத்த தான முகாம் உள்ளிட்ட சமூக நல திட்டங்களை நடத்துவதற்குரிய வாய்ப்பினை இந்த மண்டபம் வழங்கும் என்று வெய்ன் ஓங் கூறினார்.

இவ்வாண்டு தொடக்கத்தில் பொங்கல் நிகழ்ச்சியில் தான் கலந்து கொண்டபோது இந்த மண்டபத்தின் கூரைப்பகுதி பழுதாகியிருந்ததைக் கண்டறிந்ததாக அவர் சொன்னார்.

"பழமையான இந்த மண்டபம் தற்போது சீரமைக்கப்பட்டதன் வழி இங்கு நடத்தப்படும் நிகழ்ச்சிகளில் ஏராளமானோர் பங்கேற்றுப் பயன் பெறலாம்" என்று புதுப்பிக்கப்பட்ட மண்டபத்தை நேரில் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

பலாக்கோங் இந்தியர் சமூக தலைவர் கிறிஸ்டி, காஜாங் நகராண்மைக் கழக உறுப்பினர் எட்வின் தாங் மற்றும் இதர பொறுப்பாளர்களும் உடன் இருந்தனர்.

# தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ஜோம் ஷோப்பிங் வவுச்சர்கள்



**ஷா ஆலம்-**
அடுத்த மாதம் வரவிருக்கும் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு 200 ரிங்கிட் மதிப்பிலான 22,000 ஜோம் ஷோப்பிங் வவுச்சர்கள் விநியோகிக்கப்படுவதாக வறுமை ஒழிப்பு ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. பாப்பாராய்டு தெரிவித்துள்ளார். 56 தொகுதிகளில் உள்ள குறைந்த வருமானம் கொண்ட மக்களை இலக்காகக் கொண்ட இத்திட்டத்திற்கு RM4.4 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் "இந்த ஜோம் ஷோப்பிங் தீபாவளி திட்டம் அக்டோபர் 1ம் தேதி முதல் 27ம் தேதி வரை மேற்கொள்ளப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பல்பொருள் அங்காடிகளில் நிர்ணயிக்கப்பட்ட தேதி மற்றும் நேரத்திற்கு ஏற்ப வவுச்சர்களை தொகுதி சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்குவார்கள், இத்திட்டம் மக்களின் சுமையை குறைக்கவும் பண்டிகையை கொண்டாடுவதற்கு உபகரணங்களை வாங்க உதவியாக இருக்கும் என்றார் அவர்.

## பந்திங் தொகுதி

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு பந்திங் தொகுதியில் உள்ள குறைந்த வருமானம் பெறுவோர் ஜோம் ஷோப்பிங் பற்றுச் சீட்டுகளுக்கு விண்ணப்பிக்கலாம். இந்த இலவச பற்றுச் சீட்டிற்கு விண்ணப்பம் செய்வோர் தீபாவளியைக் கொண்டாடும் தொகுதிவாக்காளராகவும், இந்த திட்டத்திற்கு வரும் அக்டோபர் மாதம் 4ஆம் தேதி மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பிக்க பந்திங் வாக்காளர்களை அவர் கேட்டுக் கொண்டார்.

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முகவரி-**

**PUSAT KHDMAT MASYARAKAT DUN BANTING (019-312096)**
**A13-0 Ground Floor Block A, Plaza Banting Sentral, Jalan Wisma, 42700 Banting, Selangor.**

## செந்தோசா



தீபாவளி பண்டிகையை முன்னிட்டு செந்தோசா தொகுதிக்கு 600 ஜோம் ஷோப்பிங் இலவச பற்றுச் சீட்டுகள் ஒதுக்கப் பட்டுள்ளதாவும், பற்றுச்-சீட்டுகளுக்கு விண்ணப்பிக்க வரும் 23ஆம் தேதி திங்கட்கிழமை இறுதி நாளாக இருந்தாலும் அதன் பிறகு வரும் விண்ணப்பங்களும் பரிசீலிக்கப்படும் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் ஜி.குணராஜ் தெரிவித்தார்.

நானும் சிலாங்கூர் வாக்காளர் எனக் கூறிக் கொண்டு உதவி பெறுவதற்கு வரிசையில் நிற்காமல் சமுதாயத்தில் வசதி உள்ளவர்கள் ஏழைகளுக்கு இந்த வாய்ப்பை வழங்க வேண்டும். செந்தோசா தொகுதியில் **90,000 வாக்காளர்கள்** உள்ளனர். அவர்களில் 50 முதல் 60 விழுக்காட்டினர் இந்திய வாக்காளர்கள் இருந்தாலும் இத்தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட 600 பற்றுச்சீட்டுகள் போதுமானவையாக இல்லை.

இந்திய வாக்காளர்களில் **20 விழுக்காட்டினர்** குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினர் என்றாலும் சுமார் **9,000 பேருக்கு** பற்றுச்சீட்டு நமக்கு தேவை ஆயினும் இத்தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட **600 பற்றுச்சீட்டுகள்** உண்மையாகவே சிரமத்தில் உள்ளவர்களுக்கு கிடைப்பதை உறுதி செய்ய விரும்புகிறேன், அதற்கு தொகுதி மக்களின் ஒத்துழைப்பும் தேவை என்றார் அவர்.

## கோத்தா டாமன்சாரா



கோத்தா டாமன் சாரா தொகுதி ஏற்பாட்டில் 400 பேருக்கு தீபாவளி பற்றுச்சீட்டுகள் தீபாவளியை முன்னிட்டு கோத்தா டாமன் சாரா தொகுதியில் உள்ள வசதி குறைந்த குடும்பங்களுக்கு ஒதுக்கியுள்ளதாக தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இஸ்வான் காசிம் தனது பேஸ்புக் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

வசதி குறைந்த **பி40** தரப்பினரை இலக்காகக் கொண்ட இந்த பெருநாள் கால ஜோம் ஷோப்பிங் திட்டத்தின் கீழ் தகுதி உள்ள விண்ணப்பதாரர்களுக்கு தலா **200 வெள்ளி** மதிப்புள்ள பற்றுச்சீட்டுகள் வழங்கப்படுவதாக அவர் சொன்னார்.

## கோத்தா கெமுனிங்



இந்த தீபாவளி இலவச ஜோம் ஷோப்பிங் இலவச பற்றுச்சீட்டுகளுக்கு செப்டம்பர் 17ஆம் தேதி தொடங்கி விண்ணப்பம் வரவேற்கப்படுகிறது. இத்தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பற்றுச் சீட்டுகள் முடியும் வரை இதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ். பிரகாஷ் கூறினார்.

இந்த திட்டத்திற்கு விண்ணப்பம் செய்வோர் கோத்தா கெமுனிங் தொகுதி வாக்காளர்களாகவும் இருப்பது அவசியம் ஒரு குடும்பத்திற்கு ஒரு பற்றுச்சீட்டு மட்டுமே வழங்கப்படும் என்றார்.

இந்த பற்றுச் சீட்டுகளைப் பெற விரும்புவோர் தொகுதி சேவை மையத்தின் வாயிலாக இதற்கான விண்ணப்பத்தைச் செய்யலாம். மேல் விபரங்களுக்கு **03-51314354** என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

## பண்டமாரான்



பண்டமாரான் தொகுதி தீபாவளியை முன்னிட்டு தலா 200 வெள்ளி மதிப்பிலான இலவச ஜோம் ஷோப்பிங் பற்றுச் சீட்டுகளுக்கு தொகுதி மக்கள் விண்ணப்பிக்கலாம் என்று அறிவித்துள்ளது. குறைந்த வருமானம் பெறும் பி40 தரப்பினரை இலக்காகக் கொண்ட இதில் பயன்பெற தொகுதி இந்து மக்களை பண்டமாரான் சட்டமன்ற உறுப்பினர் டோனி லியோங் தக் சீ தனது பேஸ்புக் பதிவில் கேட்டுக் கொண்டார்.

இத்தொகுதிக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பற்றுச் சீட்டுகள் முடியும் வரை இதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படும் என்று அவர் தெரிவித்தார். மாநில அரசின் உதவித் திட்டங்களான எஸ்.எம்.யு.இ., எஸ்.எம்.ஜ.எஸ். மற்றும் பிங்காஸ் எனப்படும் சிலாங்கூர் நல்வாழ்வு திட்டத்தில் பங்கு பெறாத தொகுதி மக்கள் இந்த பற்றுச் சீட்டுக்கு விண்ணப்பிக்கலாம் என்று அவர் சொன்னார்.

இந்த பெருநாள் கால ஜோம் ஷோப்பிங் திட்டம் தொடர்பில் மேல் விபரங்களைப் பெற விரும்புவோர் **03-31631139** என்ற எண்களில் அல்லது **017-2241139** என்ற வாட்ஸ் ஆப் எண்களில் தொடர்பு கொள்ளலாம் என்றார்.

# பூமி உள்வாங்கும் அபாயத்தைத் தணிக்க நிபுணர்களுடன் செயல்படுவீர்



**புத்ராஜெயா-**
பூமி உள்வாங்குதல் அபாயங்களை மதிப்பிடுவதற்கும் குறைப்பதற்கும் ஏதுவாக புவியியல் வல்லுநர்கள் மற்றும் உள்கட்டமைப்பு நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றும்படி கோலாலம்பூர் மாநகர் மன்றம் (டி.பி.கே.எல்.) அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இப்பிரச்சனையைச் சமாளிப்பதற்கான உடனடி மற்றும் நீண்ட கால வியூகங்களைக் கண்டறிவதாகக் கோலாலம்பூர் டத்தோ பண்டார் டத்தோஸ்ரீ மைமூனா முகமது ஷெரீப்புடன் தாம் தொடர்ந்து தொடர்பு கொண்டு வருவதாகப் பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரசு பிரதேசம்) டாக்டர் ஜாலிஹா முஸ்தாபா கூறினார்.

சான்றளிக்கப்பட்ட பொறியாளர்களால் மேற்கொள்ளப்படும் புவி தொழில்நுட்ப ஆய்வுகளின் தொடக்கக் கட்டத்தில், குறிப்பாக திட்டமிடல் ஒப்புதல் விண்ணப்ப நடைமுறையின் போது ஆய்வுகள் சமர்ப்பிக்கப்படுவதை உறுதி செய்வதன் மூலம் மேம்பாடு தொடர்பான நிலையான செயலாக்க நடைமுறைகளை கூட்டரசு பிரதேச துறை மற்றும் டி.பி.கே.எல். வலுப்படுத்தும் என்று அவர் அறிக்கை ஒன்றில் தெரிவித்தார்.

இதற்கிடையில், கடந்த 23ஆம் தேதி ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஏற்பட்ட பூமி உள்வாங்குதல் சிக்கிய இந்தியாவைச் சேர்ந்த சுற்றுலாப் பயணியின் தேடல் மற்றும் மீட்பு நடவடிக்கைகள் குறித்த சமீபத்திய நிலவரங்களை விளக்குவதற்காக மலேசியாவுக்கான இந்திய தூதர் பி.என். ரெட்டியுடன் தான் நெருங்கிய தொடர்பில் இருப்பதாக டாக்டர் ஜாலிஹா கூறினார்.

அனைவரும் அமைதி காக்க வேண்டும். கோலாலம்பூரில் வசிப்பவர்களின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுதான் இப்போது எங்களின் முன்னுரிமை. இந்தப் பிரச்சனையைச் சமாளிப்பதற்கு நான் கடமைப்பட்டுள்ளேன் என அவர் குறிப்பிட்டார்.

# ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதி பாதுகாப்பானவையே

**கோலாலம்பூர்-**
ஜாலான் மஸ்ஜிட் இந்தியா பகுதியும் அங்குள்ள கட்டிடங்களும் பொது மக்களுக்குப் பாதுகாப்பானவையே என்பதை நடைபெற்ற மண் அமிழ்வு சம்பவம் தொடர்பான சிறப்பு பணிக்குழு கூட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டதாக கோலாலம்பூர் மாநகர் மன்றம் கூறியது.

அந்த சாலையில் ஏற்பட்ட மண் உள்வாங்கிய சம்பவம் ஒரு தனிப்பட்ட நிகழ்வு என்பதை பல்வேறு அரசு நிறுவனங்கள் முன்வைத்த அறிக்கைகளின் வழி தெரிய வந்துள்ளதாக மாநகர் மன்றம் அறிக்கை ஒன்றில் தெரிவித்தது.


தற்போதுள்ள புவியியல் தகவல் மற்றும் மண் ஆய்வு பதிவுகளின் படி மண் அமிழ்வு நிகழ்ந்த இடம் கென்னி ஹில்ஸ் உருவாக்கத்தில் அமைந்துள்ளது. பொதுவாகக் கூறினால், அது ஷிஸ், ஃபிலிட், குவார்ஸிட் கல் அடுக்குகளால் உருவானது என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது.

கோலாலம்பூர் மாநகர் மன்றத்தின் திட்ட மேலாண்மை நிர்வாக இயக்குநர் முகமது ஹமிம் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் பல்வேறு அரசு துறைகளின் பிரதிநிதிகள் இந்த சம்பவம் தொடர்பான தங்களின் அறிக்கைகளைத் தாக்கல் செய்தனர்.



மலேசிய நில அளவை மற்றும் வரைபட இலாகா, மலேசிய பொறியாளர் சங்கம், மலேசிய புவிதொழில்நுட்ப அமைப்பு ஆகியவை அறிக்கை தாக்கல் செய்த பிற துறைகளில் அடங்கும்.

# பண்டார் பொட்டானிக் வெள்ளப் பிரச்சனைக்கு தீர்வு



**ஷா ஆலம்-**
கிள்ளான், பண்டார் பொட்டானிக் குடியிருப்புவாசிகளின் வெள்ளப்பெருக்கு பிரச்சனைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கெசாஸ் மற்றும் பூலாவ் இண்டா நெடுஞ்சாலைகள் ஒட்டிய பகுதிகளில் பொதுப்பணித் துறை (ஜேகேஆர்) வடிகால் மேம்பாட்டு பணிகளை மேற்கொள்வதே இப்பிரச்சனைக்கு முக்கிய காரணம் என்று செந்தோசா சட்டமன்ற உறுப்பினர் கூறினார்.

ஜேகேஆர் ரோட் கேர் ஒப்பந்ததாரரால் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு பணிகள் துவங்கி இரண்டு வாரங்களில் நிறைவடையும் என எதிர்பார்க்கப்-படுவதாக டாக்டர் ஜி.குணராஜ் கூறினார்.

கடந்த மாதம் கிள்ளான் ஜேகேஆர் பிரதிநிதி கலந்து கொண்ட மாநகராட்சியின் உள்கட்டமைப்பு மற்றும் பொது வசதிகள் குழு கூட்டத்தில் இந்த விஷயத்தை நான் எழுப்பினேன்.

பராமரிப்பு பணிகள் தொடங்கப்பட்டு இரண்டு வாரங்களில் முழுமையாகப் பூர்த்தி அடையும். இதன் வழி வெள்ளம் மீண்டும் ஏற்படாமல் தடுக்க முடியும்," என்று முகநூல் மூலம் தெரிவிக்கப்பட்டது.

வெள்ளம் அருகிலுள்ள பல குடியிருப்புகளையும் பாதித்து பண்டார் புத்ரி, ஜாலான் லங்காட், ஜாலான் கெபூன் மற்றும் ஜாலான் ஜோஹன் செத்தியா உள்ளிட்ட சாலைகளில் போக்குவரத்து நெரிசலை ஏற்படுத்தியது.

# 2035 ஆம் ஆண்டுக்குள் கார்பன் வெளியேற்றத்தை குறைக்க இலக்கு

**சுபாங் ஜெயா-**
சுபாங் ஜெயா மாநகராட்சி 2035 ஆம் ஆண்டுக்குள் கார்பன் வெளியேற்றத்தை 40 சதவீதம் வரை குறைக்க இலக்கு வைத்துள்ளது என்று அதன் துணை மேயர் தெரிவித்தார்.

இலக்கை அடைய மரங்களை நடுதல், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவதை ஊக்குவித்தல், மறுசுழற்சி மற்றும் பள்ளிகள் அளவில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் உள்ளிட்ட பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டதாக முகமட் சுல்குர்னைன் சே அலி கூறினார்.

"மோட்டார் வாகனங்களைக் குறைத்தல் மற்றும் முறையான கழிவு மேலாண்மை உள்ளிட்ட பசுமை தொழில்நுட்பத்தை சமூகம் பின்பற்றுவது முக்கிய அம்சங்களில் ஒன்றாகும்.

இதற்கிடையில், சுபாங் ஜெயா உள்ளூர் திட்டம் 2035 பச்சை மற்றும் குறைந்த கார்பன் வளர்ச்சியின் முக்கிய மூலோபாயத்திற்கு இணங்க இந்த திட்டத்தின் அமைப்பு இருப்பதாக முகமட் சுல்குர்னைன் விளக்கினார்.

"குறைந்த கார்பன் தொடர்பான தகவல்களை வழங்குவதோடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கழிவு மேலாண்மை ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை வளர்ப்பதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக இது உள்ளது.



# தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரத்தியேக வீடமைப்புத் திட்டம்



**ஷா ஆலம்-**
மேம்பாட்டுத் திட்டத்தினால் பாதிக்கப்படும் தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவ சிறப்பு நிதி அல்லது வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும் என்ற பரிந்துரையை தாம் மாநில அரசிடம் முன்வைத்துள்ளதாகப் புக்கிட் மெலாவத்தி தொகுதி ஒருங்கிணைப்பாளர் தீபன் சுப்பிரமணியம் கூறினார்.

இந்த பரிந்துரை, தோட்டம் மேம்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்படும் பட்சத்தில் நெடுங்காலமாகப் பணிபுரிந்த தொழிலாளர்களுக்காகப் பிரத்தியேக வீடமைப்புத் திட்டம் உருவாக்கப்படுவதோடு அவர்கள் வங்கியில் கடனுதவி பெறுவதற்கான வசதிகளும் குறைந்தது 30 விழுக்காடு வரையிலான விலைச் சலுகையும் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் உள்ளடங்கியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

சிலாங்கூர் மாநிலத்தில் அதிகமான தோட்டங்கள் மேம்பாடு காரணமாக அடையாளத்தை இழந்து வருகின்றன. இதனால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கு அடிப்படை உரிமைகள் கிடைப்பதை உறுதி செய்ய மாநில நிலையில் உறுதியாக கொள்கை அமல்படுத்தப்பட வேண்டும் என விரும்புகிறோம். இதன் அடிப்படையில் மந்திரி புசார் டத்தோஸ்ரீ அமிருடின் ஷாரியுடம் இந்த விவகாரத்தை முன்வைத்துள்ளோம் என்று சிலாங்கூர் இன்று இணைய ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் அவர் சொன்னார்.

இனிமேல் தோட்டங்களில் மேற்கொள்ளப்படும் வீடமைப்புத் திட்டங்களில் தொழிலாளர்களுக்கு சிலாங்கூர் கூ வீடுகள் ஒதுக்கப்படுவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும் என அவர் கூறினார்.

தோட்டத் தொழிலாளர்களுக்கான பிரத்தியேக வீடமைப்புத் திட்டம் அல்லது நிதி ஒதுக்கீட்டை மாநில அமல்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையை அடுத்தாண்டிற்கான வரவு செலவுத் திட்டம் மீதான கலந்துரையாடலில் தாம் மந்திரி புசாரிடம் முன்வைக்கவுள்ளதாக அவர் சொன்னார்.

## புயல் காற்றில் சேதமடைந்த வீட்டை சீரமைக்க நடவடிக்கை



**ஷா ஆலம்-**
உலு சிலாங்கூர் மாவட்டத்தின் பத்தாங் காலி, தாமான் வாவாசானில் முன்தினம் வீசிய புயல்காற்றில் கூரை சேதமடைந்த திருமதி கே. காமாட்சியின் வீட்டை சீரமைப்பதற்கான நடவடிக்கையை உலு சிலாங்கூர் நகராண்மைக் கழக உறுப்பினர் பி.ராஜேஸ் ராவ் விரைந்து மேற்கொண்டார்.

இந்த பேரிடர் குறித்த தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆறுதல் கூறியதோடு வீட்டை சரி செய்வதற்கான நடவடிக்கைகளையும் முன்னெடுத்ததாக ராஜேஸ் ராவ் கூறினார். வீட்டில் மழை நீர் நுழைவதைத் தடுப்பதற்கான தற்காலிக நடவடிக்கையாகக் கூரைப் பகுதி கேன்வஸ் பையின் மூலம் மூடப்பட்ட வேளையில் பத்தாங் காலி சட்டமன்ற தொகுதி ஒருங்கிணைப்பாளர் சைபுடின் ஷாபி முகமது மூலம் வீட்டில் புதிய கூரைகளைப் பொருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று அவர் சொன்னார்.

பாதிக்கப்பட்ட வீட்டில் கூரைகளைச் சரி செய்யும் பணி சில தினங்களில் முற்றுப் பெறும் என எதிர்பார்க்கப்படுவதாகக் கூறிய அவர், பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு உதவும் முயற்சிக்குப் பெரிதும் துணை நின்ற உலு சிலாங்கூர் நாடாளுமன்றத் தொகுதி ஒருங்கிணைப்பாளர் டாக்டர் சத்திய பிரகாஷ், உலு சிலாங்கூர் நகராண்மைக் கழக உறுப்பினர்கள், இந்திய சமூகத் தலைவர்கள், பி.கே.ஆர்., ஜசெக, மஇகா உள்ளிட்ட அரசியல் கட்சி பொறுப்பாளர்களுக்கு தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாகக் குறிப்பிட்டார்.

## இந்திய சமூக தலைவர் ஏற்பாட்டில் தேசிய தின நிகழ்வு



**ஷா ஆலம்-**
நாட்டின் 67வது தேசிய தினத்தை முன்னிட்டு கோத்தா டாமன்சாரா தொகுதி இந்திய சமூகத் தலைவர் தேவி முனியாண்டி ஏற்பாட்டில் மூன்று இடங்களில் சிறார்களுக்கான சிறப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

கம்போங் பாரு சுங்கை பூலோ ஸ்ரீ மகா முத்து மாரியம்மன் ஆலயத்தில் இம்மாதம் 16ஆம் தேதியும் சுங்கை பூலோ ஆர்.ஆர்.ஐ., எல்ஜிஎம். ஸ்ரீ மகா வனதுர்க்கை அம்மன் ஆலயத்தில் 23ஆம் தேதியும் சுபாங், யு5, தாமான் முத்தியாரா, அவால் இல்மு பாலர் பள்ளியில் கடந்த 28ஆம் தேதியும் இந்த நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

இந்த மூன்று இடங்களிலும் நடைபெற்ற தேசிய தின நிகழ்வுகளில் கலந்து கொண்ட பாலர் பள்ளி, ஆரம்ப பள்ளி மற்றும் இடை நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 155 மாணவர்களுக்குப் பள்ளி உபகரணங்கள், கோப்புகள், இனிப்பு வகைகள் மற்றும் தேசியக் கொடி வழங்கப்பட்டதாகத் தேவி குறிப்பிட்டார்.

மாணவர்கள் மத்தியில் நாட்டுப் பற்றை விதைக்கும் அதே நேரத்தில் தேசிய தினக் கொண்டாட்ட மகிழ்ச்சியில் அவர்களும் பங்கு பெறுவதை உறுதி செய்யும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வுக்கு மாணவர்கள் மத்தியில் சிறப்பான வரவேற்பு கிடைத்ததாக அவர் கூறினார்.

## கே.கே.ஐ. ஏற்பாட்டிலான கேக் தயாரிக்கும் பயிற்சி



**கிள்ளான்-**
கோலக் கிள்ளான் சட்டமன்றத் தொகுதியின் இந்திய சமூகத் தலைவர் (கே.கே.ஐ.) தீபா மோகன் ஏற்பாட்டில் கேக் தயாரிக்கும் பயிற்சி கடந்த சனிக்கிழமை இங்குள்ள தொகுதி சேவை மையத்தில் சிறப்பாக நடைபெற்றது.

குறைந்த வருமானம் பெறும் தரப்பினரை இலக்காகக் கொண்ட இந்த ஒரு நாள் பயிற்சியில் தொகுதியைச் சேர்ந்த 45 மகளிர் கலந்து கொண்டனர். பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் பயிற்சியின் இறுதியில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

தொகுதியிலுள்ள இந்திய மகளிர் உபரி வருமானம் பெறுவதற்கு ஏதுவாக கைத்தொழிலைக் கற்றுக் கொள்ள ஊக்குவிக்கும் நோக்கில் நடத்தப்பட்ட இந்த பயிற்சிக்கு ஊக்கமூட்டும் வகையில் ஆதரவு கிடைத்தது மிகவும் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது என்று தீபா மோகன் கூறினார்.

இந்திய சமூகத் தலைவராக பொறுப்பேற்றப் பின்னர் முதன் முறையாக தாம் நடத்திய இந்த கேக் தயாரிப்பு பயிற்சிக்கு கோலக் கிள்ளான் சட்டமன்ற உறுப்பினர் அஸ்மிஸாம் ஜமான் ஹூரி முழு ஆதரவு வழங்கியதாக அவர் சொன்னார்.

இந்த பயிற்சித் திட்டம் வெற்றிகரமாக அமைவதற்கு அனைத்து வழிகளிலும் ஒத்துழைப்பை நல்கிய பங்கேற்பாளர்கள், ஏற்பாட்டுக்குழுவினர் உள்ளிட்ட அனைத்து தரப்பினருக்கும் தாம் நன்றி தெரிவித்துக் கொள்வதாக தீபா கூறினார்.

# அவசரக் காலத்தின் போது இணையம் மூலம் கூட்டம்

**ஷா ஆலம்-**

அவசர காலங்களில் சட்டமன்றக் கூட்டங்களை இணையம் நடத்துவதற்கு ஏதுவாக நிரந்தர விதிகளில் திருத்தங்களை நிறைவேற்றிய சிலாங்கூரின் நடவடிக்கையை நாடாளுமன்றமும் பின்பற்றும்.

இந்த விவகாரத்தை நடைமுறைப்படுத்த சிலாங்கூர் நிர்ணயித்துள்ள வழிகாட்டுதல்களை நாடாளுமன்றமும் பயன்படுத்திக் கொள்ளும் என்று மக்களவை சபாநாயகர் டான்ஸ்ரீ ஜோஹாரி அப்துல் கூறினார்.

மற்ற மாநிலங்களை விட சிலாங்கூர் முன்னணியில் உள்ளது. நாடாளுமன்றம் கூட பின்தங்கித்தான் உள்ளது. ஆகவே, சிலாங்கூரிடம் இருந்து நாடாளுமன்றம் கற்றுக் கொள்ளும். இதன் தொடர்பில் நாங்கள் சட்ட வரைவை தயார் செய்தாலும் சிலாங்கூரின் வழிகாட்டுதல்களைப் பயன்படுத்துவோம் என அவர் குறிப்பிட்டார்.



உறுப்பினர்கள் அவையில் இல்லாவிட்டாலும்கூட மத்திய சட்டங்கள் அல்லது மாநில சட்டங்களை எவ்வாறு செயல்படுத்த முடியும் மற்றும் செல்லுபடியாகும் என்பதை இது காட்டுகிறது. கூட்ட விதிகளில் செய்யப்படும் பல திருத்தங்கள் மாநாட்டை நடத்த அனுமதிக்கின்றன என்று அவர் கூறினார்.

கேள்விகளை நிர்வகிக்க இயங்கலை முறையைப் பயன்படுத்துவதற்கான மாநிலத்தின் நடவடிக்கையும் பின்பற்றப்பட வேண்டிய ஒன்றாகும் என அவர் சொன்னார்.

உறுப்பினர்களின் நேரடி வருகை முறையைப் பயன்படுத்தும் மாநிலங்கள் இன்னும் உள்ளன. கேள்விகள் பழைய பாணியிலே அனுப்பப்படுகின்றன. கெடா மற்றும் சிலாங்கூர் முன்னோக்கி சென்று மின்னியல் வழி கேள்விகளை அனுப்பும் முறையைப் பயன்படுத்துகின்றன. எனவே, மற்ற மாநிலங்களும் இதனைக் கற்றுக்கொள்ளலாம் என்றார் அவர்.

இந்த சிறந்த நடவடிக்கையை கருத்தில் கொண்டு சம்பந்தப்பட்ட இரண்டு விஷயங்களும் எதிர்வரும் செப்டம்பரில் நடைபெற உள்ள 2024 ஆம் ஆண்டுக்கான அகில மலேசிய நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற சபாநாயகர் மாநாட்டில் முன்வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

# மலேசிய தமிழ்க் கலைஞர்களின் நலன் காக்கும் ஐந்து திட்டங்கள்



**கோலாலம்பூர்-**

இந்நாட்டிலுள்ள தமிழ்க் கலைஞர்களின் நலன் காக்கும் ஐந்து திட்டங்களை தகவல் தொடர்புத் துறை துணையமைச்சர் தியோ நீ சிங் அறிவித்தார்.

மலேசிய நாடாளுமன்ற மக்களவை, மேலவை மற்றும் சட்டமன்ற இந்திய உறுப்பினர்களுடன் தமது அலுவலகத்தில் நடத்திய சந்திப்பின் போது இந்த திட்டங்கள் தொடர்பான அறிவிப்பை அவர் வெளியிட்டார்.

படைப்பாற்றல் உள்ளடக்க நிதி 2024, தாளம் திட்டம், வானொலியில் உள்நாட்டு பாடல்களுக்கு கூடுதல் வாய்ப்பு, உள்நாட்டு தமிழ்க் கலைஞர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கு பயிற்சி மற்றும் 'ஏஸ் வேர்க்சோப்' எனும் பயிற்சிப் பட்டறை ஆகியவையே அந்த ஐந்து திட்டங்களாகும் என அவர் விவரித்தார்.

2024 படைப்பாற்றல் உள்ளடக்க நிதித் திட்டத்திற்கு ஃபினாஸ் வாயிலாக 1 கோடியே 30 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளதாக கூறிய அவர், படைப்பாற்றல் மேம்பாட்டு நிதி, முதன் முறை அமெச்சூர் படத்தயாரிப்பு , டிவி நிகழ்ச்சி நிதி, நாட்டுணர்வு ஆவணப் பட நிதி மற்றும் கோ-புரோ நிதி என அந்த ஒதுக்கீடு ஐந்து பிரிவுகளாக பிரிக்கப் பட்டுள்ளதாகவும் இதற்கான விண்ணப்பங்கள் வரும் செப்டம்பர் மாதம் தொடங்கி திறக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

தாளம் திட்டம் குறித்து குறிப்பிட்ட அவர், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு மாநிலங்களில் இந்த தாளம் நிகழ்ச்சிக்கான பதிவு நடைபெறும். என்றார். இந்த ஆறு மாநிலங்களில் உள்ள கலைஞர்கள் தங்கள் கலைத்திறனை வெளிப்படுத்துவதற்கு உரிய வாய்ப்பை இந்த நிகழ்ச்சி ஏற்படுத்தித் தரும் என்று அவர் குறிப்பிட்டார்.

மை கிரியேட்டிவ் வென்சர்ஸ் ஏற்பாட்டிலான ஏஸ் வேர்க்சோப் பயிற்சிப் பட்டறை வரும் செப்டம்பர் மாதம் தொடங்கி ஆறு இடங்களில் நடைபெறும் என்றும் இதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் மத்தியில் திறக்கப்படும் என்றும் அவர் சொன்னார்.

துணை அமைச்சருடனான இந்த சந்திப்பில் செனட்டர் டத்தோ டாக்டர் ஆர். நெல்சன், பத்து நாடாளுமன்ற உறுப்பினர் பி. பிரபாகரன், சிலாங்கூர் மாநில ஆட்சிக்குழு உறுப்பினர் வீ. பாப்பாராய்டு, புந்தோங் சட்டமன்ற உறுப்பினர் எம். துளசி, கோத்தா கெமுனிங் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# தேசிய கல்விக் கொள்கையில் மறுசீரமைப்பு

**ஷா ஆலம்-**

தேசிய கல்விக் கொள்கை மறுசீரமைப்பு செய்யப்பட வேண்டும் என்று துணைப் பிரதமர் டத்தோஸ்ரீ டாக்டர் அகமது ஜாஹிட் ஹமிடி வலியுறுத்தியுள்ளார்.

கடந்தாண்டு மொத்தம் 10,177 மாணவர்கள் எஸ்.பி.எம். தேர்வில் அமராதது மற்றும் படித்தல், எழுதுதல், கணிதம் ஆகியவற்றில் காணப்படும் பிரச்சினைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு இந்த மறுஆய்வு பரிந்துரை முன்வைக்கப்படுவதாக அவர் சொன்னார்.

உயர்கல்வி அமைச்சர் டத்தோஸ்ரீ ஜாம்ப்ரி அப்துல் காடீர் மற்றும் கல்வியமைச்சர் ஃபாட்லினா சீடேக் ஆகியோருடன் நடத்தப்பட்ட கலந்துரையாடலின் வாயிலாக இந்த தரவுகள் கிடைக்கப்பெற்றதாக அவர் தெரிவித்தார்.

ஆறாம் ஆண்டு (தொடக்கப் பள்ளி) மற்றும் மூன்றாம் படிவத்திற்கான (இடைநிலைப்பள்ளி) தேர்வுகள் இல்லாமல் ஐந்தாம் படிவத் தேர்வை மட்டும் உள்ளடக்கியுள்ள தற்போதையக் கல்விக் கொள்கையை அவசியம் மறு ஆய்வு செய்தாக வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

அரசாங்கமும் தலைவர்களும் மாறினாலும் பாதகமில்லை. மாணவர்கள் பலிகடா ஆகாமலிருப்பதை உறுதி செய்ய கல்விக் கொள்கை எப்போதும் உறுதியானதாகவும் நிலையானதாகவும் இருப்பது அவசியமாகும் என்று அவர் குறிப்பிட்டார்.

மாணவர்கள் எஸ்.பி.எம். தேர்வை எழுதுவதற்கு தங்களைப் பதிந்து கொள்ளாமல் கல்வியை பாதியில் கைவிடும் போக்கு வளர்ந்த நாடாக மலேசியாவை உருவாக்கும் முயற்சிகளுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் அவர் அச்சம் தெரிவித்தார்.

# மடாணி அரசின் கொள்கை ஏழைகளின் நலனைப் புறக்கணிக்காது



**கோலாலம்பூர்-**
மடாணி அரசாங்கம் கொண்டுள்ள கொள்கை இந்நாட்டில் இருக்கும் ஏழ்மை நிலையிலுள்ள தரப்பினரின் நலனைப்புறக்கணிக்காது என்று பிரதமர் திட்டவட்டமாகக் கூறினார்.

இங்குள்ள தாமான் டேசாவில் உருவாக்கப்படும் ரெஸிடென்சி சூரியா மடாணி வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவைச் சுட்டிக் காட்டிய அவர், குறைந்த வருமானம் பெறும் தரப்பினர் மாநகரில்வசிப்பதற்குரிய உகந்த சூழலையும் வாய்ப்பினையும் இந்த வீடமைப்புத் திட்டம் ஏற்படுத்தித் தரும் என்றார்.

இந்த திட்டத்திற்கு கோலாலம்பூர் மாநகர் மன்றம் 45 நாட்களில் அனுமதியை வழங்கியது. சுதந்திரத்திற்கு முன்பு தொடங்கி இப்போது வரை இது ஒரு சாதனையாகக் கருதப்படுகிறது. ஏனென்றால், இதற்கு முன்னர் இத்தகைய அனுமதியைப் பெறுவதற்கு எட்டு மாதம் முதல் ஓராண்டு இரண்டு மாதங்கள் வரை கால அவகாசம் தேவைப்படும்.

மேம்பாட்டு நிறுவனங்கள் புவியியல் தொழில்நுட்ப ஆய்வு, சுற்றுச்சூழல் விளைவு மீதான ஆய்வுகளையும் இதர நிபந்தனைகளையும் முறையாக மேற்கொண்டிருந்தால் அனுமதியை விரைந்து வழங்க முடியாது என்பதற்கு எந்த காரணமும் கிடையாது என்று அன்வார் சொன்னார்.

குறுகிய காலத்தில் திட்டத்தை ஆக்ககரமான முறையில் அமல்படுத்த முடியும் என்பதை நிரூபித்துள்ளது குறித்து நான் இறைவனுக்கு நன்றி கூறுகிறேன். இரண்டு லட்சம் வெள்ளிக்கும் குறைவான விலையில் மடாணி மக்கள் வீடமைப்புத் திட்டத்தை தாமான் டேசாவில் அமைக்கும் போது அருகிலுள்ள ஆடம்பர அடுக்குமாடி குடியிருப்புகளுக்கு இணையான இடத்தைப் பெறுகிறோம் என்றார் அவர்.

## அனைத்து நாடுகளுடனும் சிறப்பான நட்புறவை பேணி வரும்

**லஹா டத்து-**
இறையாண்மை கொண்ட சுதந்திர நாடு என்ற முறையில் தனக்கும் தனது மக்களுக்கும் எது சிறந்தது என்பதை முடிவு செய்யும் உரிமையை மலேசியா கொண்டுள்ளதாகப் பிரதமர் டத்தோஸ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

அனைத்து நாடுகளுடனும் சிறப்பான நட்புறவை பேணி வர மலேசியா விரும்புவதால் இந்த விவகாரத்தில் நாட்டின் மீது எந்த தரப்பும் அழுத்தம் கொடுக்க முயற்சிக்க முடியாது என்று அவர் சொன்னார்.

கோலாலம்பூருக்கும் மாஸ்கோவுக்கும் இடையே உறவை வலுப்படுத்தவும் மலேசியாவிடமிருந்து செம்பனை எண்ணெய்யை ஏற்றுமதி செய்ய ரஷியாவை ஊக்குவிக்கவும் தாம் அதிபர் விலாடிமிர் புதினுடன் சந்திப்பு நடத்தியதாக அண்மையில் ரஷியாவுக்கு வருகை மேற்கொண்ட பிரதமர் சொன்னார்.

அதிபர் விலாடிமிர் புதினுடனான எனது சந்திப்பைத் தொடர்ந்து ரஷியாவுடான உறவை ஏன் மலேசியா வலுப்படுத்த விரும்புகிறது? அப்படியனால் அமெரிக்காவும் ஐரோப்பாவும் என்ன நினைக்கும்? என்று சிலர் கேள்வியெழுப்புகின்றனர். நாம் சுதந்திரமான யாருக்கும் கட்டுப்படாத தேசம். நமது நாட்டிற்கு எது நல்லதோ, அதை தேர்வு செய்வோம் என்றார் அவர்.

இந்தியா, சீனா, எகிப்து மற்றும் நெதர்லாந்து ஆகியவை மலேசியாவிடமிருந்து அதிக செம்பனை எண்ணெய்யை வாங்கும் நாடுகளாக விளங்குகின்றன. அந்த மூலப்பொருளின் இறக்குமதியை அந்நாடுகள் அதிகரிப்பதை உறுதி செய்ய நாம் பாடுபட்டு வருகிறோம் என்று அவர் சொன்னார்.

செம்பனை எண்ணெய் இறக்குமதியை அதிகரிக்கும்படி நாம் ரஷியாவை கேட்டுக் கொண்டுள்ளோம். அதனால்தான் அந்நாடு உடனான உறவை வலுப்படுத்தியிருக்கிறோம். சீனாவும் செம்பனை ஏற்றுமதியை அதிகரிக்க ஒப்புக் கொண்டுள்ளது.

நான் அண்மையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்த போது அவரும் மலேசியாவிடமிருந்து செம்பனை எண்ணெய் இறக்குமதியை அதிகரிப்பதாக வாக்குறுதி-யளித்துள்ளார் என்றார் அவர்.

## BNM இன் சர்வதேச கையிருப்பு 115.9 பில்லியன் டாலர்களாக உயர்ந்துள்ளது

**கோலாலம்பூர்-**
பேங்க் நெகாரா மலேசியாவின் (பிஎன்எம்) சர்வதேச கையிருப்பு ஜூலை 31 நிலவரப்படி 114.7 பில்லியன் அமெரிக்க டாலரில் இருந்து ஆகஸ்ட் 15 நிலவரப்படி 115.9 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது.

ஒரு அறிக்கையில், கையிருப்பு நிலை பொருட்கள் மற்றும் சேவைகளின் இறக்குமதிக்கு 5.4 மாதங்களுக்கு நிதியளிக்க போதுமானது என்றும், மொத்த குறுகிய கால வெளிநாட்டு கடனை விட 1.0 மடங்கு அதிகம் என்றும் கூறியுள்ளது.

கையிருப்பின் முக்கிய கூறுகள் வெளிநாட்டு நாணய கையிருப்பு 103.7 பில்லியன் அமெரிக்க டாலர்களாகும், அதைத் தொடர்ந்து சர்வதேச நாணய நிதிய கையிருப்பு (US$1.3 பில்லியன்), சிறப்பு வரைதல் உரிமைகள் (SDRs) (US$ 5.7 பில்லியன்), தங்கம் (US$2.9 பில்லியன்) மற்றும் பிற இருப்பு சொத்துக்கள் (US$2.3 பில்லியன்).

SDRகள் (RM546.54 பில்லியன்), மலேசிய அரசாங்க ஆவணங்கள் (RM12.27 பில்லியன்), நிதி நிறுவனங்களுடனான வைப்புத்தொகை (RM2.39 பில்லியன்), கடனுக்கான மற்றும் முன்பணங்கள் (RM25) உட்பட தங்கம் மற்றும் அந்நிய செலாவணி இருப்புக்கள் அடங்கிய மொத்த சொத்துக்கள் RM637.84 பில்லியன்களாகும். கடன் செலுத்தல் 28 பில்லியன்), நிலம் மற்றும் கட்டிடங்கள் (RM4.13 பில்லியன்), மற்றும் பிற சொத்துக்கள் (RM47.24 பில்லியன்). என பிஎன்எம் கூறியது.

மூலதனம் மற்றும் பொறுப்புகள் செலுத்தப்பட்ட மூலதனம் (RM100.0 மில்லியன்), இருப்புக்கள் (RM206.0 பில்லியன்), புழக்கத்தில் உள்ள நாணயம் (RM165.70 பில்லியன்), நிதி நிறுவனங்களின் வைப்புத்தொகை (RM 143.41 பில்லியன்), மத்திய அரசு வைப்புக்கள் RM5.58 பில்லியன்), மற்ற வைப்புத்தொகைகள் (RM66.95 பில்லியன்), பேங்க் நெகாரா ஆவணங்கள் (RM16.85 பில்லியன்), SDR களின் ஒதுக்கீடு (RM29.96 பில்லியன்), மற்றும் பிற கடன்கள் (RM3.28 பில்லியன்)

## பொருளாதார வளர்ச்சி 2024 இல் 5.0 சதவீத இலக்கை அடையும்

**கோலாலம்பூர்-**
மலேசியாவின் பொருளாதார வளர்ச்சி 2024 ஆம் ஆண்டில் 5.0 சதவீத இலக்கை அடையலாம் அல்லது அதைத் தாண்டும் என்று மலேசியப் பொருளாதார ஆராய்ச்சி நிறுவனம் (MIER) தெரிவித்துள்ளது.

ஜூலை 2024 க்கான அதன் மாதாந்திர பொருளாதார மதிப்பாய்வில், அரசியல் ஸ்திரத்தன்மை, மேக்ரோ அடிப்படைகள், அந்நிய நேரடி முதலீடு வரவு மற்றும் உணரப்பட்ட முதலீடுகள் ஆகியவற்றால் வளர்ச்சி உந்தப்படும் என்று MIER கூறியது.

நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தி (ஜிடிபி) விரிவாக்கம், உள்நாட்டுத் தேவை மற்றும் சுற்றுலாப் பயணிகளின் வருகையால் ஆதரிக்கப்படும் சேவைத் துறையின் வளர்ச்சியால் அதிகரிக்கப் படும்; கட்டுமானம் மற்றும் உள்கட்டமைப்பு; ஏற்றுமதி; ஆரோக்கியமான பெருநிறுவன வருவாய்; தொழிலாளர் சந்தை; வலுவான ரிங்கிட்; தேசிய மாஸ்டர் பிளான் களின் கீழ் சீர்திருத்தங்கள் மற்றும் முன் முயற்சிகளும் அதற்கு காரணிகளாக உள்ளது.

கடன் வாங்கும் செலவுகளும் நிலையானதாக இருக்க வேண்டும், மேலும் ஒரே இரவில் கடன் வட்டி கொள்கை விகிதம் 2024 முழுவதும் 3.0 சதவீதமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பேங் நெகாரா மலேசியா பணவீக்கத்தில் விழிப்புடன் இருக்கும் அதே வேளையில் பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதில் தொடர்ந்து கவனம் செலுத்தும் என்று MIER கூறுகிறது.

MIER உள்ளூர் பங்குகளுக்கான வெளிநாட்டு முதலீட்டாளர்களின் பசி அதிகரித்துள்ளதாகவும், இந்த வேகம் 2H 2024 இல் தொடரும் என்றும், 2025 வரை நீட்டிக்க வாய்ப்புள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இதற்கிடையில், உள்நாட்டு கடன் பத்திரங்களுக்கு தேவை 2H2024 இல் வலுவாக இருக்கும். அவை வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நல்ல கவர்ச்சியாக இருக்கும்.

“அதே நேரத்தில், 2025 ஆம் ஆண்டில் சாத்தியமான மதிப்பீடு மேம்படுத்தல் அட்டைகளில் உள்ளது, இது நிதி ஒருங்கிணைப்பு, சிறந்த நிர்வாகம், வலுவான பொருளாதார அடிப்படைகள் மற்றும் கூட்டரசு கடன்-ஜிடிபி விகிதத்தை உள்ளடக்கிய பொது நிதி ஆகியவற்றால் வகைப்படுத்தப்படுகிறது,” என்று அது கூறியது.

# படிவம் ஆறு மாணவர்கள் கொடுப்பனவுக்கான ஒதுக்கீட்டை கல்வி அமைச்சகம் முன்மொழியும்

**ஷா ஆலம்-**
படிவம் ஆறு மாணவர்களுக்கான கொடுப்பனவு ஒதுக்கீட்டை கல்வி அமைச்சகம் 2025 பட்ஜெட்டில் (MOE) முன்மொழியும்.



படிவம் ஆறு மாணவர்களின் நலனை மேம்படுத்தவும் கல்வி அமைச்சு உறுதிபூண்டுள்ளது, அவர்கள் சரியான கல்வியைப் பெறுவது உறுதி செய்யப்படும் என அமைச்சர் ஃபத்லினா சிடேக் கூறினார்.

"இந்த ஒதுக்கீடு 2025 பட்ஜெட்டில் சேர்க்கப்படும். நிதி கிடைக்கிறதோ இல்லையோ, எல்லா மாணவர்களுக்காகப் போராடுவோம். கூடுதலாக, ஃபெடரல் உதவித்தொகையின் விரிவாக்கம் போன்ற பிற விஷயங்களையும் நாங்கள் ஆராய்ந்து வருகிறோம்.

"முன்னதாக, ஃ பெடரல் நிதியுதவி ஏழ்மை நிலையில் உள்ள மாணவர்களுக்கு மட்டுமே கிடைத்தது. ஆனால் அதிகமான மாணவர்கள் பயன்பெறும் வகையில் அதனை விரிவுபடுத்த நாங்கள் கோருகிறோம்," என்று அவர் கூறினார்.

முன்னதாக, நாட்டில் படிவம் ஆறு கல்வியை மாற்றியமைக்கும் முயற்சிகளின் ஒரு பகுதியாகக் கொடுப்பனவை வழங்குவதற்கான முன்மொழிவை கல்வி அமைச்சு முன் எடுத்து வைத்ததாக அவர் விளக்கினார்.

# ஜேபிஜே கவுண்டர்களில் நான்கு மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்

**பட்டர்வொர்த்-**
வாடிக்கையாளர் நெரிசல் மற்றும் காத்திருப்பு நேரத்தைக் குறைப்பதற்காக நாடு முழுவதும் உள்ள ஜேபிஜே கவுண்டர்களில் கவனம் செலுத்தும் வகையில் திங்கள்கிழமை (செப்டம்பர் 9) முதல் நான்கு மேம்பாடுகள் அறிமுகப்படுத்தப்படும்.

அரசாங்கத்தின் தலைமைச் செயலாளர் டத்தோஸ்ரீ ஷம்சுல் அஸ்ரி அபு பக்கரின் ஆலோசனையைத் தொடர்ந்து இந்த உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அதன் இயக்குநர் ஜெனரல் டத்தோ ஏடி ஃபேட்லி ரம்லி தெரிவித்தார்.

"முதலாவதாக, ஜேபிஜே உதவியாளர்களை நாம் ஜேபிஜே அசிஸ்ட் என்று அழைப்போம். இந்த அதிகாரிகள் இணையம் மூலம் செய்யக்கூடிய பரிவர்த்தனைகளை மேற்கொள்ள வாடிக்கையாளர்களுக்கு உதவுவார்கள் மற்றும் வழிகாட்டுவார்கள்.

"இரண்டாவதாக, ஜேபிஜே ஆப்ஸ் மற்றும் mySIKAP போர்டல் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் மலேசிய ஓட்டுநர் உரிமம் மற்றும் மோட்டார் வாகன உரிமத்தை இணையத்தில் புதுப்பிக்க ஊக்குவிப்போம்" என்று அவர் செய்தியாளர் கூட்டத்தில் கூறினார்.

கூடுதலாக, QR குறியீட்டை ஸ்கேன் செய்வதன் மூலம் வாடிக்கையாளர்கள் வரிசை எண்களைப் பெறுவதற்கு ஜேபிஜே `JPJeQ` அமைப்பை மேம்படுத்தும்.

இந்த முன்னேற்றத்தின் மூலம், ஜேபிஜே, வாகன உரிமம் மற்றும் ஓட்டுநர் உரிம பரிவர்த்தனைகளுக்கான இயற்பியல் ஆவணங்கள் அல்லது படிவங்களை மின் ஆவணங்கள் அல்லது மின் படிவங்களாக மாற்றும்.

ஜேபிஜே கவுண்டருக்கு வருவதற்கு முன்பு வாடிக்கையாளர்கள் இதை முன்கூட்டியே பூர்த்தி செய்ய முடியும். இதன் மூலம், வாடிக்கையாளர்கள் வரிசையில் நிற்கவோ, கவுண்டருக்கு செல்லவோ தேவையில்லை," என்றார்.


**SELANGOR INDRU**

Sidang pengarang

**PENASIHAT**
Lembaga Editorial MSSB

**PENGARANG KUMPULAN**
Fathi Aris Omar

**KETUA PENGARANG**
A.Pakiyanathan

**PENOLONG PENGARANG**
Rajah Ramaya

**ARTIS GRAFIK**
Kathiravan Manoharan

**JURUGAMBAR**
Asri Sapfie,
Raheemie Arifiri,
Hafiz Othman & Fikri Yusof

**Aras 11, Menara Bank**

**Rakat, No1 Jalan Indah**
**14/8, Seksyen**
**14, 4000 Shah Alam.**

*Tel: 03-5523 4856*
*Faks: 03-5523 5856*
*Email: info@mediaselangor.com*


## சட்டவிரோதக் குடியேறிகளை வேலைக்கு அமர்த்தும்

# முதலாளிகள் மீது கடுமையான நடவடிக்கை

**புத்ராஜெயா-**
சட்டவிரோதக் குடியேறிகளை வேலைக்கு அமர்த்தும் முதலாளிகளுடன் மலேசிய குடிநுழைவுத்துறை சமரசம் செய்து கொள்ளாது. அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த ஜனவரி 1 முதல் ஆகஸ்ட் 16 வரை சட்டவிரோதக் குடியேறிகளை வேலைக்கு அமர்த்தியதற்காக உள்ளூர்வாசிகள் உட்பட 900 முதலாளிகள் கைது செய்யப்பட்டனர் என குடிவரவுத் துறையின் இயக்குநர் ஜெனரல் டத்தோ ரஸ்லின் ஜூசோ கூறினார்.

அதே காலகட்டத்தில், 11,903 சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதாகவும், 106,432 இடங்களில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் குடியேற்றச் சட்டம் மற்றும் பாஸ்போர்ட் சட்டத்தை மீறிய 29,030 சட்டவிரோதக் குடியேறிகள் கைது செய்யப்பட்டதாகவும் அவர் கூறினார்.

சட்டவிரோதக் குடியேறிகள் உணவகத்தில் வேலை செய்வது குறித்து பல புகார்கள் வந்துள்ளதாகவும், சரியான ஆவணங்கள் இல்லாத அல்லது நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்கு மேல் தங்கியிருக்கும் அவர்களை வேலைக்கு அமர்த்தும் முதலாளிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ரஸ்லின் கூறினார்.

"சட்டவிரோதக் குடியேறிகளை ஒருபோதும் பணியமர்த்த வேண்டாம். இது குடியேற்றச் சட்டத்தின் கீழ் கடுமையான குற்றமாகும். யார் வேலைக்கு வந்தாலும் சரியான செயல் முறையைப் பின்பற்ற வேண்டும்" என முதலாளிகளுக்கு எச்சரிக்கை விடுத்தார்.

# நாட்டில் இன்சுலின் பற்றாக்குறை இல்லை

**புத்ராஜெயா-**
மலேசியா இன்சுலின் பற்றாக்குறையை எதிர்நோக்கவில்லை என்பதோடு தற்போதையக் கையிருப்பு ஆண்டு இறுதி வரைக்கும் போதுமானது என்று சுகாதார அமைச்சு உறுதிப்படுத்தியது.



புதிய விநியோகிப்பாளர்களை விரைந்து கண்டறியும் முயற்சியில் அமைச்சு ஈடுபட்டுள்ள அதேவேளையில் மற்ற மாற்று வழிகளையும் அது ஆராயத் தொடங்கிவிட்டது என்று அமைச்சர் டத்தோஸ்ரீ டாக்டர் ஜூல்கிப்ளி அகமட் கூறினார்.

மலேசியா எவ்வளவு நாட்களில் இன்சுலின் விநியோகத்தைப் பெற முடியும் என நிருபர்கள் கேட்டதற்கு, முன்பு பல மாதங்கள் அல்லது அடிக்கடி காத்திருந்த சூழலுடன் ஒப்பிடுகையில், 60 நாட்களுக்குள் நாங்கள் அதை விரைவுபடுத்துவோம் அவர் பதிலளித்தார்.

சமீபத்தில் சுகாதார அமைச்சின் மருத்துவமனைகளில் மனிதர்களுக்கான இன்சுலின் விநியோகத்தில் இடையூறு ஏற்பட்டதற்கு உற்பத்தி சிக்கல் காரணமாக இருந்ததாகக் கடந்த வாரம் சுகாதார அமைச்சு கூறியிருந்தது.

மேலும் நோயாளிகளுக்கான சிகிச்சையில் தடங்கல் ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்ய நோயாளிக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவரின் மருத்துவ மதிப்பீட்டின் அடிப்படையில் அனலாக் இன்சுலின் மற்றும் வாய்வழி மருந்துகளை வழங்கும் சிகிச்சையை அதிகரிப்பது உட்பட பல நடவடிக்கைகளை அமைச்சு செயல்படுத்தியது.

# 2024 ஹாங்காங் பொது பூப்பந்துப் போட்டி

## பெர்லி– தீனா வாகை சூடினர்




**கோலாலம்பூர்-**

ஹாங்காங் கொலிசியம், கவுலூனில் நடைபெற்ற ஹாங்காங் பொது பூப்பந்து வெற்றியாளர் பட்டத்தை வெல்வதற்கு நாட்டின் முன்னணி மகளிர் இரட்டையர்களான பெர்லி டான்-எம்.தீனாவுக்கு38 நிமிடங்கள் மட்டுமே தேவைப்பட்டன.

உலக தரவரிசையில் மூன்றாவது இடத்தில் உள்ள சீனாவின் லியு ஷெங் ஷு-டான் நிங் ஜோடியை 21-14, 21-14 என்ற செட் கணக்கில் வீழ்த்திய அந்த ஜோடிக்கு இந்த பருவத்தில் கிடைத்த முதல் இரட்டையர் பட்டம் இதுவாகும்.

உலகத் தரவரிசையில் எட்டாவது இடத்தில் இருக்கும் பேர்லி-தீனா ஜோடி இப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் மிகத் தீவிரமான ஆட்ட பாணியை வெளிப்படுத்தினர். இதனால் ஏற்பட்ட முட்டுக்கட்டை காரணமாக எதிரணியினர் பல எளிய தவறுகளைச் செய்தனர்.

இந்த வெற்றியானது, கடந்த இரண்டு ஆண்டுகளாக அகில உலக சம்மேளனத்தின் உலக பூப்பந்து சுற்றுப்பயணத்தில் தேசிய ஜோடி எதிர்நோக்கி வந்த வறட்சியான சூழலை முடிவுக்குக் கொண்டு வந்துள்ளது.

ஆகக் கடைசியாக 2022 பிரெஞ்சு பொது பூப்பந்துப் போட்டியில் பேர்லி-தீனா பட்டத்தை வென்றனர்.

## கவலைக்குறிய அளவில் மாணவர்களிடையே பார்வைக் குறைபாடு

**கோலாலம்பூர்-**

பள்ளி மாணவர்களிடையே பார்வைக் குறைபாடு பிரச்சனை கவலைக்குரிய நிலையில் உள்ளதை"மாத்தா ஹாதி விலயா" பரிசோதனை திட்டத்தின் புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.

இதுவரை கிடைத்த புள்ளி விவரங்களின்படி, கடந்த ஜூன் மாதம் திட்டம் தொடங்கிய லிருந்து 2,077 மாணவர்களில் 58.2 சதவீதம் பேருக்கு பார்வை மங்கலாக இருப்பது கண்டறியப்பட்டது என பிரதமர் துறை அமைச்சர் (கூட்டரசு பகுதிகள்) டாக்டர் ஜாலிஹா முஸ்தபா கூறினார்.

"பரிசோதனையின் போது, ஒன்றாம் ஆண்டு மாணவர்களுக்குப் பார்வைக் குறைபாடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் அதை அறியாமல் இருக்கிறார்கள். இது நிச்சயமாக அவர்களின் படிப்பை பாதிக்கும்.

மலேசியாவின் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கோலாலம்பூர் கூட்டரசு பகுதி அளவிலான எஸ்பிஎம் சிறப்புக் கருத்தரங்கு நிகழ்ச்சியின் போது, "இந்தப் பிரச்சனைக்கு உடனடியாக தீர்வுக் காண விட்டால், மாணவர்கள் கற்றலில் பின்தங்கக் கூடும்" என்று அவர் கூறினார்.

மாத்தா ஹாதி விலாயா திட்டம் உசாஹா ஜெய இன்சான் திட்டத்தின் ஒரு பகுதியாகும் என டாக்டர் ஜாலிஹா கூறினார். இந்த திட்டம் கூட்டரசு பிரதேசங்கள் முழுவதும் உள்ள ஆரம்ப பள்ளி மாணவர்களிடையே கண் சுகாதார பிரச்சனைகளை நிவர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

திட்டத்தில் பங்கேற்க தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளில் புக்கிட் பந்தாய், டேசா தாசிக் மற்றும் வங்சா மாஜு செக்ஷன் 1 ஆகிய தேசியப் பள்ளிகளும் அடங்கும்.

## கால்பந்து போட்டி

### மாணவர்களின் திறனை மேம்படுத்தும்



**ஷா ஆலம்-**

கோத்தா கெமுனிங் தொகுதி ஏற்பாட்டில் நடைபெற்ற ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்கான கால்பந்து போட்டி மாணவர்கள் மத்தியில் விளையாட்டு திறனை மேம்படுத்த உதவும் என்று தொகுதி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.பிரகாஷ் நம்பிக்கை தெரிவித்தார்.

செக்சன் 21, இளைஞர் மற்றும் விளையாட்டுத் துறை அரங்கில் நடத்தப்பட்ட இந்த கோத்தா கெமுனிங் தொகுதி சுழல் கிண்ணப் போட்டியில் தொகுதியிலுள்ள 11 பள்ளிகளைச் சேர்ந்த 12 குழுக்கள் கலந்து கொண்டதாக அவர் சொன்னார்.

முதன் முறையாக இந்த போட்டியில் பள்ளிகள் மிகவும் ஆர்வமுடன் கலந்து கொண்டது ஊக்கமளிக்கும் வகையில் உள்ளது. இதன் அடிப்படையில் அடுத்தாண்டும் 15 வயதுக்கும் குறைந்த மாணவர்கள் பங்கேற்கும் வகையில் இப்போட்டியை விரிவான அளவில் நடத்த திட்டமிட்டுள்ளோம் என அவர் சொன்னார்.

இந்த போட்டியில், தனது கோத்தா கெமுனிங் தொகுதியில் உள்ள எமரால்டு தமிழ்ப்பள்ளி, ஹைக்கோம் தமிழ்ப்பள்ளி மற்றும் சீபீல்டு தமிழ்ப்பள்ளி ஆகிய மூன்றும் கலந்து கொண்டது குறித்து தாம் மகிழ்ச்சி அடைவதாக கூறிய அவர், இதன் மூலம் அப்பள்ளி மாணவர்கள் விளையாட்டில் திறனையும் அனுபவத்தையும் வளர்த்துக் கொள்வதற்கு மற்ற இன மாணவர்களுடன் கலந்துரையாடுவதற்கும் வாய்ப்பு கிட்டும் என்றார் அவர்.

இப்போட்டியில் கோத்தா கெமுனிங் தேசியப் பள்ளி முதல் இடத்தையும் புக்கிட் ரீமாவ் தேசியப் பள்ளி இரண்டாம் இடத்தையும், கோத்தா கெமுனிங் தேசியப் பள்ளி மூன்றாம் இடத்தையும் பிடித்தன.

வெற்றி பெற்ற குழுக்களுக்கு சட்டமன்ற உறுப்பினர் பிரகாஷ் வெற்றிக் கோப்பை. ரொக்கப் பரிசு மற்றும் சான்றிதழ் வழங்கினார். இந்த நிகழ்வில் ஷா ஆலம் மாநகர்மன்ற உறுப்பினர்கள் ராமு நடராஜன், திருமதி லோகேஸ்வரி சுவாமிநாதன், நத்தின்ட்ரன் ராஜ், இந்திய சமூகத் தலைவர்கள் கோபி. மா. நடராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சீனா ஓபன் பூப்பந்து போட்டியில் வெற்றி வாகை



**கோலாலம்பூர்-**

சீனாவில் நடைபெற்ற பூப்பந்து போட்டியில் தேசிய ஆடவர் இரட்டையர் ஜோடியான கோ சீ வெய் – இஷானுடின் ரும்சானி, சீனா ஜோடியை தோற்கடித்து வரலாற்றைப் படைத்தனர்.

தேசிய அணி முதல் செட்டை 13-21 என இழந்த நிலையில் உலகின் ஏழாவது தரவரிசையில் உள்ள ஹீ ஜி டிங்-ரென் சியாங் யூ ஜோடி வெற்றி அடைய எளிதான பாதையை வழங்கவில்லை.

தேசிய ஆடவர் ஜோடி 21-12, 21-17 என்ற செட் கணக்கில் உலகின் ஏழாவது தரவரிசையில் உள்ள எதிராளியை எதிர்த்துப் போராடி, இறுதியாக வெற்றி வாகை சூடினர்.

இப்போட்டியில், தேசிய அணி US$148,000 (RM622,361) மற்றும் ஜி டிங்-சியாங் யூ US$70,000 (RM294,360) வென்றனர்.



# இந்திய சமூகத்தின் நலனை
## ஒற்றுமை அரசு ஒரு போதும் புறக்கணித்ததில்லை

**புத்ராஜெயா-**
நாட்டிலுள்ள இந்திய சமூகத்தின் நலன்களை ஒற்றுமை அரசாங்கம் ஒருபோதும் புறக்கணித்தது கிடையாது என்று பிரதமர் டத்தோஶ்ரீ அன்வார் இப்ராஹிம் திட்டவட்டமாகக் கூறினார்.

இந்திய சமூகம் சம்பந்தப்பட்ட கல்வி, வழிபாட்டுத் தலங்கள், வேலைவாய்ப்புகள் உட்பட அனைத்து முக்கிய அம்சங்களும் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருகின்றன என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

இந்தியர்களைப் பிரதிநிதிக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில சட்டமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின் போது இச்செய்தியை நான் உறுதிப்படுத்தியுள்ளேன். அதே-சமயம், அனைத்து இனங்களுக்கும் இடையிலான நல்லிணக்கத்தைப் பேணுவதன் முக்கியத்துவமும் இச்சந்திப்பின் போது எடுத்துரைத்தேன் என்று அவர் தனது முகநூல் பதிவில் குறிப்பிட்டுள்ளார். பிரதமரின் இந்த பதிவு அவரின் முகநூல் பக்கத்தில் தமிழ் மொழியில் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு உணவுக்கூடை அன்பளிப்புக்காக சுமார் 15 லட்சம் வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளத் தகவலையும் பிரதமர் இப்பதிவில் வெளியிட்டுள்ளார்.

மேலும், கெடா, ஜொகூர், சிலாங்கூர், நெகிரி செம்பிலான், பினாங்கு ஆகிய மாநிலங்களில் இந்து மயானம் அல்லது மின்சுடலைகளை நிர்மாணிப்பதற்காக 2 கோடி வெள்ளி ஒதுக்கப்பட்டுள்ளது.



இந்திய சமூகத்தின் நலனை உறுதி செய்யும் வகையில், எதிர்வரும் அக்டோபர் 18 ஆம் தேதி அறிவிக்கப்படவுள்ள 2025 ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தில், முந்தைய வரவுசெலவுத் திட்டத்தில் அமல்படுத்தப்பட்ட குறிப்பிட்ட சில திட்டங்கள் தொடரப்படவுள்ளன என்று அவர் சொன்னார்.

முன்னதாக, அரசாங்கம் மலேசிய இந்திய சமூக உருமாற்றப் பிரிவுக்கு (மித்ரா) குறிப்பிட்ட நிதியை ஒதுக்கீடு செய்திருந்தது. மேலும், தேசிய தொழில்முனைவோர்களுக்கான பொருளாதார நிதி (தெக்குன்), அமானா இக்தியார் மலேசியா ஆகியவற்றின் வழி இந்திய சமூகத்திற்காக சில நிதி ஒதுக்கீடுகளையும் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதன் அடிப்படையில், எதிர்காலத்தில் நாட்டில் உள்ள இந்திய சமூகத்தின் சமூக-பொருளாதார நிலை தொடர்ந்து உயர்த்தப்படும் என்று நான் பெரிதும் நம்புகிறேன் என பிரதமர் தெரிவித்தார்.

# ஒற்றுமையை பேணிக் காத்து வாய்ப்புகளை பயன்படுத்திக் கொள்வோம்

**கோலாலம்பூர்-**
சுதந்திரம் மற்றும் சுயேச்சையான மலேசியா என்ற உண்மையான அர்த்தத்தை மலேசியர்கள் ஏற்றுக்கொண்டு பிரிவினையையும் விரோதத்தையும் நிராகரிக்குமாறு பிரதமர் டத்தோஶ்ரீ அன்வார் இப்ராஹிம் இன்று மலேசியர்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

நாட்டின் ஆற்றல் மற்றும் திறன்களை உயர்த்த அனைத்து மலேசியர்களும் ஒற்றுமையை நிலை நிறுத்த வேண்டும் என இன்று அவர் தனது முகநூல் பதிவில் வலியுறுத்தினார்.

ஆண்டுதோறும் நடைபெறும் மலேசியா தினக் கொண்டாட்டம், இனம், மதம், கலாச்சாரம் ஆகியவற்றைக் கடந்து தேசத்தின் மீதான அன்பையும் மக்களிடையே ஒற்றுமையையும் வெளிப்படுத்துவதாக இருக்க வேண்டும் என்று அவர் சொன்னார்.

நமது நேசத்திற்குரிய நாடான மலேசியாவுக்கு 61 வயதாகிறது. இந்த காலகட்டத்தில் நாம் பல்வேறு சவால்களை சமாளித்து வலுவாக உருவெடுத்துள்ளோம். அனைவருக்கும் 61 வது மலேசியா தின வாழ்த்துக்கள் என்று அன்வார் கூறினார்.

கடந்த 1963 ஆம் ஆண்டு மலேசியா உருவானதை நினைவுகூரும் வகையில் செப்டம்பர் 16 ஆம் தேதி மலேசியா தினம் கொண்டாடப்படுகிறது.


இவ்வாண்டுக்கான தேசிய அளவிலான மலேசியா தின கொண்டாட்டம் சபாவில் உள்ள கோத்தா கினாபாலுவில் உள்ள பாடாங் மெர்டேகாவில் நடைபெற்றது.

# நாட்டில் முதலீடு வரவு RM160 பில்லியனாக அதிகரித்துள்ளது

**கோலாலம்பூர்-**
ஜனவரி முதல் ஜூன் 2024 வரை நாட்டிற்குள் அனுமதிக்கப்பட்ட முதலீட்டு வரவு RM160 பில்லியனாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டின் இதே கால கட்டத்துடன் ஒப்பிடுகையில் 18 சதவீத வளர்ச்சியைக் குறிக்கிறது என்று பிரதமர் டத்தோஶ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

இந்த முதலீடுகள் ஏறக்குறைய 3,000 புதிய திட்டங்களை உள்ளடக்கியதாக அவர் கூறினார். இது மலேசியர்களுக்கு 79,000க்கும் மேற்பட்ட வேலை வாய்ப்பை உருவாக்கும்.

“முதலீடு, வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம், நிதி அமைச்சகம் மற்றும் வெளிநாடுகளில் உள்ள மலேசிய முதலீட்டு மேம்பாட்டு ஆணையம் போன்ற அனைத்து துறைகளின் ஒத்துழைப்புடன் இந்த அளவிலான முதலீடு எட்டப்பட்டுள்ளது” என்று அவர் கூறினார்.



# நிலைப்பாட்டை எடுக்க யாரும் மலேசியாவை வற்புறுத்த முடியாது

**விளாடிவோஸ்டோக்-**
அமெரிக்கா மற்றும் சீனா இடையே அதிகரித்து வரும் பதற்றம் குறித்து மலேசியா கவலையடைந்துள்ளது.

எனினும், எந்த தரப்புக்கு ஆதரவு தருவது என்பது தொடர்பான நிலைப்பாட்டை எடுக்க நாட்டை யாரும் கட்டாயப்படுத்த முடியாது என்று பிரதமர் டத்தோஶ்ரீ அன்வார் இப்ராஹிம் கூறினார்.

அமெரிக்கா, சீனா இடையே அதிகரித்து வரும் பதற்றம் குறித்த கவலை உள்ளது. ஆனால், எந்த தரப்புக்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டை எடுக்கும்படி எங்களை வற்புறுத்த முடியாது என்று ரஷ்ய ஊடகங்களுக்கு வழங்கிய பேட்டியில் அவர் கூறியதாக ஸ்புட்னிக் செய்தி வெளியிட்டுள்ளது.

வர்த்தகம் மற்றும் முதலீட்டைப் பொறுத்த வரை நாம் அமெரிக்காவின் முக்கிய பங்காளியாக இருந்து வருகிறோம். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் முதலாவது இடத்தில் இருக்கிறோம். ஆகவே, அனைத்து துறைகளிலும் முன்பை விட விரிவான அளவில் தொடர்புகளை வலுப்படுத்தி வருகிறோம் என்று அவர் சொன்னார்.

தீர்வு காண்பதுதான் எங்களின் நோக்கமும் நிலைப்பாடும் ஆகும். ரஷ்யாவுக்கு எதிராக மேற்கு நாடுகளுக்கு ஆதரவளிப்பதல்ல. இவ்வாறு செய்வதால் எங்களுக்கு என்ன நன்மை கிட்டப் போகிறது? என்று அவர் வினவினார்.

அமெரிக்காவைப் போலவே சீனாவுடனும் நாங்கள் அணுக்கமான நட்புறவைப் பேணி வருகிறோம். ஒரு தரப்புக்கு ஆதரவளிக்க நீங்கள் ஏன் வற்புறுத்துகிறீர்கள்? என்றார் அவர்.

Diterbitkan oleh **Media Selangor Sdn Bhd** (Sebelumnya dikenali **Communication Sdn Bhd**), Aras 11, Menara Bank Rakat, No1 Jalan Indah 14/8, Seksyen 14, 4000 Shah Alam, Selangor. Dicetak oleh **Ultimate Print Sdn Bhd** Lot 2, Jalan Sepana 15/3, off persiaran Seksyen 15, 40200 Shah Alam, Selangor